SWATHANTRA SANGU
Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

18712

கல்லைப் பெண்ணாக்கிய காட்சி

அகலியை :—'கார்கொண்ட மேனிக் கவினுற்ற சோதிக் கருணை மணக்கு கமலங்கள்
நேர்கொண்ட கண்ணா ! நிறைகொண்ட நேமி யிலகும் கரத்த ! நின்மார்பில்
சீர் கொண்டிலங்கத் திரு வேட்கையாகத் தெளிந்தோர் மனத்து மலர் சேர்ந்த
தார் கொண்டெனக்கு முயிரீந்த தாங்கள் தமியேன் விருப்பு' சரணென்றாள். —ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

[இராமாயணத்தின் இந்த ஆச்சரியக் காட்சியை வெகு உன்னதமாக 'சீதா கல்யாணம்' என்ற ஒலிப் படத்தில் நடித்திருக்கிறார்கள். ராமனாக வரும் சிரஞ்சீவி ராஜத்தின் சுகுமார வேடத்தை மேற்படி படம் காட்டுகின்றது.]

புத்தகம் 4. மாசி மீ 19உ (2-3-34) வெள்ளி இதழ் 14.

நடை

'எண்ணங்கள் எழிலோ டிருப்பின் அழகான வார்த்தைகளும் தாமே வரும்' என்று மில்தன் ஓரிடத்தில் பாடியிருக்கின்றார். ஆகவே எழுத்தில் பழகுவதற்கு முந்திக் கருத்தில் பழகுவது பயன்தரு மென்பது ஏற்படுகின்றது. செவ்விய கருத்துக்களையும் சந்தர்ப்பத்திற்கேற்ற வார்த்தைகளையும் உடைய ஆசிரியர்களையும் தடுமாறச் செய்துவிடுவது ஒன்றுண்டு. அதுதான் 'நடை.'

'நடை' என்பது கருத்துக்களைப் பொறுத் திருக்கவில்லை. வார்த்தைகளைக் 'கொத்து' முடைவதுமல்ல. சலியாத ஓட்டத்தை ஊட்டுகின்ற ஜீவ தாதுவைத்தான் 'நடை' என்று சொல்லலாம். எந்த இலக்கியத்திலும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதமான நடைக்குப் 'புகழ்' இருந்துவந்திருக்கிறது. சாஸர் காலத்தில் எழுதப்பட்ட நடை ஜான்ஸன் காலத்தில் இல்லை. ஜான்ஸன் காலத்தி லெழுதப்பட்ட நடை மெக்காலே காலத்தில் காணவில்லை. அதிஷ்டமென்று. ஒரே காலத்தில் பல ஆசிரியர்களிருப்பார்களாயின் ஒரு பேனா சித்தரிக்கும் நடை இன்னொரு பேனாவிடம் காணப்படுவதில்லை. ஆகவே அந்தந்த ஆசிரியனுக்கென்று ஒரு அலாதி நடை உண்டு என்றுதான் சொல்லலாம்.

ஆனால் இந்த 'நடை' இருக்கின்றதே, இது ஒரு ஓட்டுவாரொட்டி. ஒரு எழுத்தாளனிடம் மதிப்பு ஏற்பட்டுவிட்டால் உடனே அவனுடைய நடையைப் போல எழுதவேண்டு மென்றும், அதுதான் நிர்மலமான நடை யென்றும் ரஸிகனுக்குத் தோன்றும். அதே சோட்டிலேயே சில எழுத்தாளரும் பின் தொடர்ந்து ஓடுவர். ஆனால் எழுத எழுத நாளடைவில் அவரவருக்கான ஒரு தனி நடை தானாகவே வாய்த்துவிடு மென்பது பலருடைய அநுபவம்.

சிங்காரப் பூமாலை தொடுப்பதுபோலச் சின்னச்சின்ன வார்த்தைகளை ஓராசிரியன் கோத்து வைத்துவிடுகின்றான். அந்த நடையின் இன்னிசைக் களிப்பில் வாசகர் மூழ்கிப் போவதால் ஆசிரியனுக்கு ஆழக் கருத்து இருக்கின்றதா இல்லையா என்பதைக்கூடக் கவனிக்கத் தோன்றுவதில்லை. இன்னொரு ஆசிரியன் நாம் எதிர்பாராத கம்பீரமான வார்த்தைகளையும், திருப்புகளையும் திடீர் திடீரென வைத்து நமது மனதைக் கவர்ந்து விடுகின்றான். அந்த ஸாகஸத்தில் திக்பிரமையடைந்து ஒன்றும் சொல்வதற்கில்லாது போகின்றது. வேறொரு ஆசிரியன் வார்த்தை வெள்ளத்தில் ஆர அமரச் சாந்தத்தோடு நீந்திக்கொண்டே போகின்றான். இவ்வாறு களிப்போ, வியப்போ, சாந்தமோ வேறெந்த விதமோ சித்தரிப்பு இருந்தாலும் சலிப்புத் தராத எந்த நடையும் சிறந்தது என்றுதான் கூறவேண்டும்.

சந்தர்ப்பங்களுக்கேற்ற சந்தங்களைக் கையாள்வது கவியரசர்களின் கைவரிசை. அதே போல விஷயங்களுக்கேற்ற நடையையும், அந்தந்த ரஸங்களுக் கேற்ற நடையையும் கையாள்வது உரைநடை யாசிரியர்களின் லாகவம். தத்தமக்கு எது சுபாவமான நடையோ அதற் கேற்றதான விஷயங்களையே பொறுக்கிக்கொள்வது வேறு சிலருடைய சமர்த்து. ஆகவே விஷயங்களுக்கு ஏற்ப 'நடை' அமையவேண்டும், அமையவும் அமையும் என்பது ஓரளவுக்கு உண்மைதான்.

ஆனால் ஒரேவிதமான நடையைக் கொண்டு எல்லா விஷயங்களையும் சித்தரித்து விடலாமென நினைப்பது வறட்டுப் பிரயத்தனமாகத்தான் முடியும். ரமணீயமாகக் கதை சொல்ல ஏற்றதாக ஒருவருடைய 'சுபாவ' நடையிருக்கலாம். சிரிப்புக் கொப்பளிக்கும்படி களியூட்டத்தக்க சுபாவ நடை இன்னொருவரிட மிருக்கலாம். வாசகரின் எண்ணங்களை மேலும் மேலும் கிளறுவதான கருத்துக்களை மழைபோலப் பொழியும் வன்மையும் அதற்கேற்ப சுபாவ நடையும் இன்னொருவரிட மிருக்கக்கூடும். அந்தந்த ஆசிரியர்கள் தத்தம் சுபாவ நடையை அறிந்து அதற்கேற்ற விஷயங்களைச் சித்தரிப்பதுதான் பயன்தரும். திரிலோக சஞ்சாரி யென நினைத்துத் திரிந்தால் திடுக்கென்று விழத்தான் நேரும். குதிரை புல்லை மேய்வதுதான் சரி. வண்டு புஷ்பங்களை மேய்வதுதான் பொருத்தம். இரண்டும் அழகுதான். ஆனால் இடம் மாறினாலோ —

இப்போது தமிழ்மொழியின் உரைநடைக்கு ஓரளவு உருவம் ஏற்பட்டுவிட்டதாகவே சொல்லலாம். அந்த உருவத்திற்குப் பிராணப் பிரதிஷ்டை செய்து இலக்கிய ஜீவனை உலவச்செய்வதற்கு முயற்சிகள் நடந்துவருகின்றன. பதினைந்து வருடங்களாகப் பேனா ஓட்டிவரும் பல ஆசிரியர்களிடத்தில் அவரவருக்குப் பிரத்தியேகமான ஓர் எழில் நடை இருப்பதைக் காண்கின்றோம். அவர்களுடைய சித்திரங்களைப் படிப்பதால் நடையழகு என்பது இன்னதென்று அறிந்து கொள்ளலாம். பண்டத்தின் சுவையை நாவினால் தான் அறியலாம்; இலக்கியத்தில் நடையின் அழகைப் படிப்பதனால்தான் அறிந்து கொள்ளலாம். நடையைப் பற்றி வேறு எவ்வாறு வர்ணிப்பது? 'நடை' எந்த இலக்கணச் சிறையிலும் அகப்படுவதன்று. இப்போது உள்ள ஆசிரியர்களின் நடைகளோடு இனிமேல் நவமாகத் தோன்றப் போகும் ஆசிரியர்களின் நடைகளும் சேர்ந்து விட்டால், நமது இலக்கிய தேவி ஒயிலுடன் நடந்து உலவுவாளென்பதில் ஐயமில்லை.

—சங்கு ஸுப்ரஹ்மணியன்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மாசிமீ 19உ வெள்ளிக்கிழமை (2—3—1934) [No. 14

முதல் வகுப்பு வேண்டாம்

ரயில் வண்டியில் எதற்காக மூன்று வகுப்புகள் இருக்கவேண்டும்? முதல் வகுப்பு என்ற பெயருடைய சில வண்டிகள் கோக்கப்படுகின்றனவே அவைகளால் ரயில்வே நிர்வாகத்துக்குப் பெருத்த நஷ்டமென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. இந்த வகுப்பு வண்டிக்கு அலங்காரச் செலவு ஏராளமாகச் செய்யப்படுகின்றது. ஆனால் அவை சம்பாதித்துத் தரும் பணமோ மிக மிகக் குறைவு.

முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புகளில் பிரயாணம் செய்பவர்களில் பெரும்பாலோர் 'அமிஞ்சி' பாஸ் உடையவர்கள். கையெரியக் காசு தந்து போகிறவர்கள் மிக மிகச் சொற்பம். இந்த மேல் வகுப்பு வண்டி ஓடுவதால் ஏற்படும் செலவைக் கட்டிக் கொடுப்பவனோ மூன்றாம் வகுப்புப் பிரயாணியாவான். ஆனால் அவன் தலையிலெழுத்தோ உட்காருவதற்கு இடமில்லாது நின்றுகொண் டிருக்க வேண்டியிருக்கிறது மூட்டுப் பூச்சிகளைச் சகிக்கவேண்டி யிருக்கிறது. அவனுக்கேற்படும் அசவுகர்யத்துக்காகவா அவன் கூலி தருகின்றான். ஆனால் அவன் தரும் காசில் ஒரு பகுதியை இந்த 'ஒஸ்தி' வகுப்பு உண்டு விடுகின்றதே என்ன அநியாயம்!

ஒரு முதல் வகுப்பு ஆஸனம் வருஷத்துக்கு 60 தடவைதான் உபயோகிக்கப்படுகிறது. இரண்டாம் வகுப்பு ஆஸனம் வருஷத்துக்கு 180 தடவை உபயோகிக்கப்படுகின்றது. மூன்றாம் வகுப்பு ஆஸனமோ வருஷத்துக்கு 400 தடவை உபயோகிக்கப் படுகின்றதாம். டெல்லிச் சட்டசபையில் மிஸ்டர் ஜோஷி தெரிவித்த இந்தக் கணக்கினின்று பெரும்பாலும் முதல் வகுப்பு வண்டி காலியாய் ஓடிக்கொண் டிருக்கிறதென்றும், மூன்றாம் வகுப்பு வண்டியில் அளவுக்கு அதிகமாகக் கூட்டம் ஏறுகின்றதென்றும் விளங்குகின்றதல்லவா?

வரும்படியைக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் முதல் வகுப்பின் சம்பாத்தியம் சோடையாகத்தானிருக்கிறது. ஒரு முதல் வகுப்பு ஆஸனம் வருஷத்துக்கு 208 ரூ. சம்பாதித்தால், இரண்டாம் வகுப்பு 'ஸீட்' 236 ரூபா சம்பாதிக்கின்றது. மூன்றாம் வகுப்பு ஆஸனமோ 241 ரூபா சம்பாதித்துத் தருகிறது. முதல் வகுப்பு வண்டிக்கு சம்பாத்தியக் குறைவு மட்டுமல்ல, தன் அலங்காரத்திற்காக ஏராளமாகச் செலவு செய்யுமாறும் செய்கிறது.

ஏதோ சில பிரமுகர்களின் சுகத்துக்காக ரெயில்வே நிர்வாகம் நஷ்டப்படுவானேன்? ரெயில்வே பொது ஜனங்களின் சொத்தல்லவா? மேலும் அந்தப் பிரமுகர்களையெல்லாம் 3-ம் வகுப்பில் பிரயாணம் செய்யுமாறு செய்தால் அப்போதுதான் 3-ம் வகுப்புப் பிரயாணியின் கஷ்டம் அவர்களுக்குத் தெரியவரும். ஆகவே எல்லாவற்றையும் உத்தேசித்து இந்த முதல் வகுப்பு என்ற வண்டியையே ஒழித்து விடுவதுதான் சிலாக்கியம்.



—*Courtesy* : ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

ரயில்வேயில் மூன்றாவது வகுப்புப் பிரயாணியிடமிருந்து கிடைக்கும் வருமானத்தினால் ஒஸ்தி வகுப்பு வண்டிகளை ஓட்டிக்கொண் டிருக்கிறார்கள். இந்த அநியாயம் என்றைக்குப் போகும்?

நமது உலைக்கூடம்

85 ஆயிரம் அபராதமா?

ஒரே ஒரு ராஜாவை ஒரு எலி கடித்துவிட்டதாம். அந்த எலி எங்கே ஓடிற்றென்பது தெரியவில்லை. தேடச் சொல்லி உத்தரவிட்டான் ராஜா. எலி வீடுகளுக்குள்ளே ஒளிந்துகொண்டிருப்பதாகப் பிரதானிகள் கூறினர். "சரி, அப்படியானால் வீட்டையெல்லாம் பொசுக்கி விடுங்கள். எல்லா எலிக்கும் அப்போதுதான் புத்தி வரும்" என்று கடைசி உத்திரவு போட்டானாம். இது கட்டுக் கதை. ஆனால் வடமொழி நூல்களில் இதை அநேகர் கையாண்டிருக்கின்றனர். இந்தக் கதையை நாமும் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தக்க விதத்தில் வங்காள சர்க்கார் நடந்து கொண்டிருக்கின்றது.

சிட்டகாங் ஜில்லாவும், மிதுனபுரி ஜில்லாவும் பெரிய 'புரட்சிக்காரர் பொந்து' என்பது சர்க்கார் அதிகாரிகளின் சொல். அப்படியே அங்கு புரட்சிக்காரர்களிருப்பின் அவர்களைப் பிடித்துத் தண்டித்துக்கொள்ளச் சர்க்கார் முயற்சி செய்யவேண்டுமே யன்றி ஜில்லாவிலுள்ள எல்லோருக்கும் தண்டவரி, அபராதம் போட்டு வசூலிப்பதென்றால் அது கதையில் அரசன் எலி வேட்டை யாடியதுபோலத்தான்.

சிட்டகாங் ஜில்லாவிலும் மிதுனபுரி ஜில்லாவிலும் ராணுவப்படை ஊர்வலம் வரும்போது அதை உபசரிக்க வேண்டுமாம். 'யூனியன் ஜாக்' கொடி பறந்தால் எல்லோரும் கொடி வணக்கம் செய்யவேண்டுமாம். இவைகளைச் செய்யுமாறு பொதுஜனங்கள் பலாத்காரம் செய்யப்படுகின்றார்களாம். வங்காளச் சட்டசபையில் இதைப்பற்றிக் கேள்விகேட்டால் 'தகவல் ஏதும் கிடைக்கவில்லை' யென்ற பல்லவியை அதிகாரவர்க்கம் சொல்கின்றது. சிட்டகாங் வாசிகளிடமிருந்து 78631 ரூபாயும் மிதுனபுரி வாசிகளிடமிருந்து 6659 ரூபாயும் அபராதமாக வசூலிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்த மாதிரி அபராதம் வசூலிப்பது ஒழுங்கான அரசு ஆகுமா வென்று பிரிட்டிஷாரே சொல்லட்டும்.

கணக்குத் தயாரித்தல்

ஹாஸ்டலில் உள்ள பையன் தகப்பனுருக்கு எழுதும் மாதச் செலவு கணக்கை வெகு சாமர்த்தியமாகத் தயாரிப்பான். ஸினிமா 0—12—0 என்றும் மருந்துச் சார்ஜ் 4—3—0 என்றும் எழுதுவான். உண்மையோ என்ன என்றால் மருந்து 0—12—0 ரூபாயாகவும் ஸினிமாச் செலவு நாலு ரூபாயாகவும் இருக்கும். இந்தத் தந்திரம் எப்படியோ இந்திய சர்க்காரின் கணக்குத் தயாரிப்பவர்களுக்கும் தெரிந்திருக்கிறது.

இந்திய ராணுவச் செலவு சுமார் 50 கோடியா என்று பொதுஜனக் கூக்குரல் பலமாக இருக்கிறதல்லவா? அந்த இனத்தில் ஒரு வேலை செய்திருக்கின்றார்கள். இராணுவ உபயோகத்திற்காகவே வடமேற்கு எல்லைப் புறத்தில் ஒரு ரயில்வே யிருக்கின்றது. அதனால் வருடா வருடம் 2 கோடி ரூபாய் வீண் செலவாகின்றது. இந்த 2 கோடியையும் இராணுவச் செலவோடு சேர்க்கவேண்டியதே நியாயம். ஆனால் இந்த 2 கோடி ரூபா நஷ்டத்தையும் ரயில்வே வரவு செலவோடு சேர்த்து ஆஜர் செய்திருக்கின்றார்கள். இது நல்ல சாமர்த்தியம் அல்லவா? இதை விடத் தைரியமாக ராணுவச் செலவு 52 கோடி யென்று சொல்லட்டுமே. இந்த சர்க்காருக்குப் பயம்தான் யாரிடத்தும் இல்லையே!

பாலக்கரைத் தட்சிணை

சென்னை மந்திரி சபையின் மூளையை மேனாடுகளுக்கு அனுப்பிச் சோதனை செய்தால் தேவலை. வரும்படிக்குப் புதிய புதிய யோசனைகளை யல்லவோ சொல்கிறார்கள்! புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு மசோதாவில்,

"இனி ஜில்லா போர்டுகளினாலோ அவர்கள் உதவியினாலோ கட்டப்படும் பாலங்களின்மீது செல்லும் வண்டிகள், மிருகங்கள், பாதசாரிகள், எல்லோரிடமிருந்தும் பாலக்கரை 'டோல்' பணம் வாங்கும் உரிமை ஸ்தல ஸ்தாபனத்திற்கு உண்டு" என்று ஓர் பிரிவு காணப்படுகிறது.

மிருகங்களோடாவது பாதசாரிகளை அதாவது மனிதர்களை ஒப்பிட்டது வெகு அழகாகத்தான் இருக்கிறது. நல்ல வேதாந்த ஞானம்! பாலத்தின்மீது நடந்து செல்வதற்குத் தட்சிணை தர வேண்டுமெனச் சட்டம் செய்வது அபூர்வமான யோசனைதான். சோழ பாண்டிய ராஜர்களுக்குக்கூட இது தோன்றியதில்லை யல்லவா?

ஒவ்வொரு பாதசாரியிடமும் எவ்வளவு வசூலிப்பதாக உத்தேசமோ? தம்பிடியா? காலணாவா? அல்லது நாலணாவா? இதையும் கண்டிராக்டுக்கு விடுவார்களா? அல்லது ஸ்தல ஸ்தாபனமே இதைக் கவனிக்குமா? இதை விட பாலக்கரை தர்மம் என்று ஒரு உண்டியோடு சட்டசபைப் பெரியார்களை ஆங்காங்கு நிறுத்திவைத்தால், தேவையான பணம் வசூலாகி விடுமென்று தோன்றுகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பர்மாச் சட்டசபையில் இப்போதுள்ள ஆவேசம் எப்போதுமே இருந்ததில்லை என்னலாம். சபையின் அக்கிராஸனாதிபதியான ஸர் ஆஸ்கார் கிளான்வில்லி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக ஜனப் பிரதிநிதிகளின் 41 வோட்டு! எதிர்த்து சர்க்கார் நியமன அங்கத்தினருள்பட 42 வோட்டுத்தான்! ஒரே வோட்டுத்தான் வித்யாசம். பொது ஜனங்களிடம் வாஸ்தவமாக இந்த அக்கிராஸனருக்கு மதிப்பிருக்குமானால் தமது ஸ்தானத்தைக் காலி செய்துவிட வேண்டும். ஆற்றோடு போகிறவன் துரும்பிடம் அடைக்கலம் புகுவது போல ஒற்றை வோட்டுக்கு அவர் தாஸனாகக்கூடாது.

பர்மாவை இந்தியாவினின்று பிரித்துவிட வேண்டுமென்று விஷமப் பிரசாரம் செய்துகொண்டிருந்த மந்திரிகள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் பர்மாச் சபையில் நிறைவேற்றப்பட்டது ஸாமுவேல் ஹோரின் சூழ்ச்சிக்குச் சாவு மணி அடித்ததுபோலாகிவிட்டது. ஆனால் இதெல்லாமா பிரிட்டிஷ் ராஜீயவாதியைத் தைக்கப்போகிறது?

முப்டி கான்ஸ்டபிள்களா?

காக்கி சட்டை, செந்தலைப்பாகை, எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டுச் சாதாரண உடை உடுத்து உலவும் கான்ஸ்டபிள்களை முப்டிகள் என அழைப்பது போலீஸ் பாஷை. ஒவ்வொரு சர்க்கார் உத்தியோகஸ்தனையும் ஒரு முப்டி கான்ஸ்டபிளாக ஆக்கிவிட வேண்டுமென்பது இந்திய சர்க்காரின் ஆசையெனத் தோன்றுகிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எவ்வாறு இனி நடந்துகொள்ள வேண்டுமென்பது குறித்துப் புதிய சட்டதிட்டங்கள் சில தயாரிக்கப் பட்டிருக்கின்றன. ராஜீய இயக்கங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தன் சம்பந்தப்படலாகாது என்று கூறுவதோடு நில்லாமல், அவனுடைய உறவினரில் யாராவது ராஜீய இயக்கங்களில் ஈடுபட்டாலும் அவன் கீழ் உத்தியோகஸ்தர்களில் யாராவது ஈடுபட்டாலும் அவனே அதற்குப் பொறுப்பாளியென்று கருதப்படுவானாம். ஆகவே தனது உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் இனி என்ஜினியர், டாக்டர் உள்பட சகலரும் முப்டி கான்ஸ்டபிள்களைப் போல ஸி.ஐ.டி. வேலை செய்துகொண்டிருந்தாகவேண்டும் போலிருக்கிறது. அது மட்டுமில்லை. இந்தத் தேசத்தில் இருக்கிற ஜாதிகளும், வகுப்புகளும் போதாவென்று இனி “சர்க்கார் சேவக ஜாதி” என்ற ஓர் ஜாதியையும் சர்க்கார் சிருட்டிக்கும் போலிருக்கிறதே! சர்க்கார் உத்தியோகமென்றால் சர்வ அடிமைத்தனம் என்று பொருள்படும்படி ஏற்பாடுகள் நடந்து வருவது கவனிக்கத் தக்கது.

வாலிழந்த நரியார்

“கூண்டில் அகப்பட்டு வாலைப் பறிகொடுத்துவிட்டு வந்தது ஒரு நரி. வந்தவுடன் அது இதர நரிகளைப் பார்த்து, ‘இந்த வால் என்ற சாமான் நமக்கு அனாவசியம்தானே’ என்று பிரசங்கித்ததாம். அந்த மாதிரி பிரிட்டிஷ் பிரதம மந்திரியான ராம்சே மாக்டனால்டு ஓர் வாலிழந்த நரி. ‘கட்சி பலம்’ என்ற வால் அறுபட்டுப் போய் பலமாதங்களாகிவிட்டது” என்று வெகு ஏளனமாக லார்ட் பீவர் ப்ரூக் சீமையில் ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். இந்த நரி ாலை மட்டும் இழக்கவில்லை, மூளையை ம் பறிகொடுத்துவிட்டது என்று ருத்தம் செய்தால் நல்லது.

தூக்கத்தில் உளறல்

பாட்னாவிலிருந்து ஒரு வினோதமான தந்திச் செய்தி. அதாவது ஹாஜிபூர் சத்திரமொன்றில் ஒருவன் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். தூக்கத்தில் பெரிய பூகம்பம் ஏற்பட்டதுபோலக் கனவு கண்டான். உடனே உளறியடித்துக்கொண்டு எழுந்து ஓடினான். ஆங்கிருந்த சுவரில் பலமாக மோதிக்கொண்டு காயமுற்றுக் கீழே விழுந்தான். கயிற்றைப் பாம்பென நினைத்துச் சஞ்சலப்படுதலென்று வேதாந்தங்களில் சொல்கிறார்களே அதைப் போன்று இதுவும் ஓர் உதாரணமாகும். சீமையில் காமன்ஸ் சபையில் பேஜ் கிராப்ட் என்ற மகான் உளறல் கனவுகள் கண்டு கன்னாபின்னாவென்று பிதற்றிக் கொண்டிருக்கிறார். சிலோனில் வெள்ளைக்காரர்களுக்கு ஆதிக்கம் குறைந்துபோய் விட்டதாகவும் அதற்குக் காரணம் ஜனநாயக அரசியலென்று நினைப்பதாகவும் கூறினார். இந்த ஜனநாயக எண்ணம் அடுத்தாற்போலுள்ள இந்தியாவிலும் ஏற்பட்டுவிட்டால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே அழிந்துபோய் விடுமென, தான் நினைப்பதாக பேஜ்கிராப்ட் கூறினார். எல்லாம் கனவின் உளறல்கள். ஆனால் அந்தக் கனவின் பயனாக அவருக்கேற்பட்டுள்ள மனக் கஷ்டமோ அபாரம். ஸிலோனில் எவ்வளவு ஜனநாயகம் இருக்கிறதென்பது அருகிலுள்ள நமக்குத் தெரியாதா என்ன?

வினோதமான வாதம்

சென்னைச் சட்டசபையில் வரவு செலவுத் திட்டப்பேச்சு நடந்தபோது பொக்கிஷ மந்திரி ஒரு ஆச்சரியமான வாதம் சொன்னார். “சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களில் 100-க்கு 5 வீதம் குறைத்துவிட்டால் ஏதோ 15 லட்சம் மிச்சப்படலாம். ஆனால் போதுமென்ற மனத்தோடு உழைத்துவரும் ஓர் கூட்டத்தைக் கஷ்டத்துக்கு உள்ளாக்குவது நியாயமா? ஆனால் விவசாயிகளின் வரிவஜாவை $12\frac{1}{2}\%$ இலிருந்து $16\frac{3}{4}\%$ க்கு உயர்த்தினால், சர்க்காருக்கு 13 லட்சம் பரம நஷ்டம்! அதனால் நிலச சுவான்தார்களுக்கும் தனித் தனியாகப் பிரமாத லாபம் ஏற்பட்டுவிடுமா?” இந்த அழகான கட்சியை இந்த பொக்கிஷப் பிரபு அச்சடித்துப் படம் போட்டு வைத்துக் கொள்ளட்டும். இனிமேல் வரப்போகும் நிதி மந்திரிகளும் இந்த விநோதக் கட்சியைப் பின்பற்றுவார்களல்லவா?

ஸபாஷ் காசியே!

காசி ஹிந்து சர்வ கலாசாலையினர் ஓர் முக்கியமான முடிவுக்கு வந்திருப்பதை பத்திரிகைகளனைத்தும் புகழ்கின்றன. சரித்திரம், பொருளாதாரம், தர்க்கம், அரசியல் முதலிய பாடங்களை இண்டர்மீடியட் வகுப்பு வரையில் ஹிந்தி பாஷையிலேயே சொல்லித்தர வேண்டுமென ஷை சர்வ கலாசாலை முடிவு செய்திருக்கிறது. காந்திஜியின் பக்தரும் தர்மவானுமான கனசியாமதாஸ் பிர்லா அவர்கள் ஹிந்தியில் ஷை பாட புத்தகங்களைத் தயாரிக்க 50 ஆயிரம் ரூபா தர்மத்துக்கு எழுதி வைத்திருக்கிறார். லாகூர் சர்வ கலாசாலையும் காசியைப் பின்பற்றப் போகின்றதாம். சென்னை சர்வ கலாசாலையும், அண்ணாமலை சர்வ கலாசாலையும் இனி இண்டர்மீடியட் வரை தாய் மொழியில் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யலாகாதா?

ஸி. ஐ. டி செலவுகள்

பம்பாய் சட்டசபையில் கேட்கப்பட்ட ஓர் கேள்விக்குப் பதில் கூறிய போது போலீஸ் ஸி. ஐ. டி இலாகாவுக்கு அம்மாகாணத்தில் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது என்பது தெரிந்தது. 1932-33ஆல் பம்பாய் நகரத்தில் மட்டும் ஸி. ஐ. டிபார்ட்மெண்டின் சம்பளப் பட்டுவாடா 3715 ஆயிரம் ரூபாவாயிற்றாம். பிறகு இதரச் செலவுகள் 2,56,761 ரூபா ஆயிற்றாம். அதில் இரகஸ்ய நிதியினின்று 5432 ரூபா கொடுக்கப்பட்டதாம். பம்பாய் மாகாண முற்றிலும் ஸி. ஐ. டிபார்ட்மெண்ட் நிர்வாகத்துக்காக சுமார் ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டிருப்பதாகக் கணக்கு தரப்பட்டது. இத்தனை செலவு செய்து எந்தெந்த மலையை நோண்டி எத்தனை எலிகள் பிடிக்கப்பட்டனவோ? செலவுக்கேற்ற பயன் உண்டா?

தபால் விகிதத்தில் மாறுதல்கள்

1934-35 ஆம் வருஷத்து வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தபோது இந்தியநிதி மந்திரி ஷுஸ்டர் தபால் கட்டண விகிதங்களைப்பற்றிச் சில சிபார்சுகள் செய்திருக்கிறார்.

$2\frac{1}{2}$ தோலா எடை வரை கவர்களுக்கு $1\frac{1}{4}$ அணா ஒட்டவேண்டுமென்பதில் மாற்றமில்லை. $\frac{1}{2}$ தோலா எடையுள்ள கவர்களுக்கு ஒரு அணா கட்டணம் வாங்கிக்கொள்வது என்று புதியதொரு யோசனை. இதனால் ஆரம்ப வருஷத்தில் 27 லட்சம் நஷ்டமேற்பட்டாலும் பிறகு நிலைமை நிமிர்ந்து விடுமென நினைக்கிறார் ஷுஸ்டர்.

தயாரிக்கப்பட்ட கவர்களுக்கு ஒரு தம்பிடி அதிகமாக வாங்கப்பட்டு வந்ததல்லவா? அந்த ஒரு தம்பிடியையும் ரத்து செய்து விடுவதென்பது அடுத்த யோசனை. இதனால் $2\frac{1}{2}$ லட்சம் சர்க்காருக்கு நஷ்டமேற்படுமென்று உத்தேசம் கூறுகிறார் நிதி மந்திரி.

5 தோலா எடையுள்ள புத்தகக் கட்டுக்கு அரையணா வாங்கப்பட்டு வந்ததல்லவா, அதை முக்காலணா வாக்குவது என்று ஓர் யோசனை. இதனால் 5 லட்சம் லாபம் வருமென எதிர்பார்க்கப் படுகிறதாம்.

தந்திக் கட்டண விகிதத்திலும் ஒரு மாறுதல். இப்போது அமுலிலிருக்கும் விகிதங்களோடு எட்டு வார்த்தைக் கொண்ட ஒரு தந்திக்கு ஒன்பதணா கூலியென்று ஒரு புதிய ஏற்பாடும் செய்யப்படவேண்டுமாம். ஒவ்வொரு அதிக வார்த்தைக்கும் 2 அணா சார்ஜாம். இதனால் ஆரம்ப காலத்தில் 3 லட்ச ரூ. நஷ்டமேற்பட்டாலும் பிறகு லாபம் வருமாம்.

இறக்குமதியாகும் சர்க்கரை, உப்பு, புகையிலை, சிகரட்டு முதலியவைகளின் மீது வரியை உயர்த்துவதென்றும் வெள்ளிமீது போடப்பட்டுள்ள $7\frac{1}{2}$ அணா சுங்க வரியை 5 அணாவுக்குக் குறைப்பதென்றும் யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பீஹார் கஷ்ட நிவாரணத்துக்கு $3\frac{1}{2}$ கோடி சிபார்சு. 380 லட்சம் ஸ்டர்லிங் கடன் வாங்குவதென்று ஒரு யோசனை. இவ் விஷயங்களைப் பற்றி சட்டசபை விவாதம் நடைபெறும் போது நமது அபிப்பிராயத்தைச் சொல்லுவோம்.

சென்னை கவர்னரை எதிர்த்த உபாத்தியாயர்

"ஹோம்ரூல் இயக்கம் மும்முரமாயிருந்த காலத்தில் சென்னைக் கவர்னராக பெண்ட்லண்ட் பிரபு இருந்தார். காலேஜ் மாணவர்கள் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுமென்று கவர்னர் ஒரு சுற்றறிக்கை விட்டார். அந்த அறிக்கையை அமுலுக்குக் கொண்டு வருவதை ஆலோசிக்க, கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குக் காலேஜ் பிரின்ஸிபால்களை வரவழைத்தார்.

"சென்னைக் கிறிஸ்தியன் கலாசாலைக்குப் பிரின்ஸிபாலாக அப்போது டாக்டர் வில்லியம் ஸ்கின்னர் என்ற அறிஞர் இருந்தார். ஒழுங்கு, கட்டுப்பாடு முதலியவைகளில் பிரியமுடையவர். பள்ளிக்கூட ஆசிரியர்களின் கடமைகளை நன்குணர்ந்தவர். லார்ட் பெண்ட்லண்ட் ராஜபக்திப் பிரசங்கமொன்றைச் செய்த பின்பு 'ஹோம்ரூல்' இயக்கத்தை நசுக்கப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் துரைத்தனத்துக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தன்னைப் போலவே ஸ்காட்லாண்டில் பிறந்தவரான வில்லியம் ஸ்கின்னரைக் கூப்பிட்டு எவ்வாறு அவர் மாணவர்களை அடக்கியாளப் போகிறாரென்று சொல்லுமாறு கேட்டார்.

"அப்போது ஸ்கின்னர் சொன்னார்:- 'ஐயா நான் ஒரு கல்வி போதகன், நான் போலீஸ்காரனல்ல. மாணவர்களுக்கு நல்ல வாழ்வு, நல்ல அறிவு, நல்ல குணம் முதலியவை ஏற்படுமாறு செய்வதுதான் எனது தொழில். எனது மாணவர்களை நானே வேவு பார்க்கும் ஸி. ஐ. டி. யாக வாழ ஒப்புக்கொள்ளமாட்டேன். மாணவர்கள் எனது சொந்தக் குழந்தைகளாவர். ஆகவே இவ்விஷயத்தில் நான் என்ன உதவி செய்வேன் என்ன செய்யக்கூடும் என்று கேட்கவே கேட்காதீர்கள்.' இந்தப் பேச்சைக்கேட்டுக் கவர்னர் திடுக்கிட்டு விட்டார். அளவுக்கு மிஞ்சித் தான் போனது அப்போது அவருக்குத் தெரிந்தது. நட்புடன் சில நேரம் உரையாடியபின், அனைவரும் கலைந்தனர்."

இந்தக் கதையை டெல்லிப் பத்திரிகையொன்று பிரசுரித்து நமது ஞாபகத்தைக் கிளறிவிட்டது. வந்தவாசியில் ஓர் சாதாரண ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஒருவர் இருக்கிறார். மகாத்மாஜியின் விஜயத்தைப் பார்க்கச் சென்ற குற்றத்துக்காக அவர் சில மாணவர்களுக்கு அபராதம் முதலியன விதிப்பதில் முயன்றிருக்கிறாராம். இந்த வாத்தியாரின் புத்தி இவ்வளவு சில்லரையாக இருக்கவேண்டுமா? மகாத்மாவைப் போன்ற பெரியார் ஆயிரம் வருஷத்துக் கொருமுறைதான் உலகில் தோன்றக்கூடும். அவரைப் பார்க்கச் சென்றதை ஓர் குற்றமாகக் கருதும் இந்த வாத்யாருக்கும் வில்லியம் ஸ்கின்னருக்கும் எவ்வளவு வித்தியாசம் ?

'காந்தி' தினசரி ஜாமீன் தொகையை இழந்தது

நண்பர் T. S. சொக்கலிங்கத்தைப் பிரசுர கர்த்தாவாகக் கொண்ட 'காந்தி' தினசரி ரூபாய் 500 ஜாமீன் தொகை கட்டியிருந்தது நேயருக்கு ஞாபகமிருக்கலாம். அந்தத் தொகையைச் சர்க்கார் பறிமுதல் செய்துவிட்டார்களாம். பீகார் பூகம்பத்தின் சம்பந்தமாக 'சர்க்கார் எங்கே' என்று எழுதப்பட்ட தலையங்கத்தில் சர்க்கார் குற்றம் கண்டு பிடித்தார்களாம். இந்தப் பறிமுதல் விஷயத்தைப் பற்றிச் சொக்கலிங்கம் ஹைக்கோர்ட்டில் வழக்குத் தொடுப்பாரா இல்லையா வென்பது இன்னும் தெரியவில்லை.

இன்னொரு சட்ட காலேஜ் !

இருக்கிற லாகாலேஜ்களில் படித்துவிட்டு அலைகின்ற வக்கீல் கூட்டம் போதாதென்று நினைத்து இதே மாகாணத்தில் இன்னொரு லா காலேஜை அனந்தபூரில் ஏற்படுத்தப் போகிறார்களாம். இருக்கிற லா காலேஜுகளையே இடித்துத் தரை மட்டமாக்க வேண்டுமென்று ஸர் பி. ஸி. ரே போன்றோர் சொல்லிக் கொண்டிருக்க இன்னொரு லா காலேஜ் சிருஷ்டிக்கப்பட வேண்டுமா ? ஆந்திர ஸர்வ கலாசாலை இதற்கு அநுமதி தந்துவிட்டதாம் வேடிக்கையே. வேலையில்லாது கஷ்டப்படும் சில வக்கீல்களுக்கு பிரொபஸர் உத்தியோகங்கள் கிடைப்பதுதான் லாபம் !



ஒரு சங்கு பால்!

(ஆயில்யம் எழுதிய சிறு கதை)

வாசலில் இருந்த தீபத்தை எடுத்துக்கொண்டு வாசற் கதவைத் தாளிட்டுப் போவதற்காகக் காமாட்சியம்மாள் திண்ணைப் பக்கம் வந்தாள். அங்கு கொறட்டிலே யாரோ நின்று கொண் டிருந்தாற்போ லிருந்தது.

"யாரு அங்கே நிற்கிறது?" என்று கேட்டுக்கொண்டே விளக்கை அந்தத் திக்கு நோக்கித் திருப்பினாள் காமாட்சியம்மாள்.

"நாந்தானுங்க! ஒங்க தோட்டத்திலே வேலே செய்யறத்துக்காவ வந்திருக்கிறாரே அவரு பொண்ஜாதிங்க!" என்று மெதுவான குரலில் பதில் வந்தது.

காமாட்சியம்மாள் விளக்கை நிமிண்டிவிட்டு எதிரே நின்றுகொண்டிருந்தவளை ஏறஇறங்க ஓர் தடவை பார்த்தாள்.

"ஆஹாம்! மணி ஒம்பதாச்சே! இந்த அகாலத்திலே இங்கே ஏன் வந்து நிக்கிறே?" என்று கேட்டாள்.

"அம்மா! எனக்கு ஒரே ஒரு சங்கு பால் வேணுங்க. அந்தக் கொயந்தை விடாது கத்துதுங்க. அதை எங்கிட்ட விட்டுட்டு அந்தப் பாவி போயிடணுமா? வச்சுருந்த பாலே பூனே குடிச்சுட்டுப் போயிடுச்சுங்க. ராத்ரிப் பாலுக்கு எங்கே போறதுங்க. ஒரே ஒரு சங்கு பால் கொடுங்க. போதும்" என்று தாழ்மையான குரலில் கூறினாள் அவள்.

"பாலா? ராத்ரி வேளேலெயா? நன்னா வந்து கேட்டயே. ராத்ரிலே வெள்ளைச் சாமான் எதையும் கொடுக்கப்படா தென்பா. எங்க வீட்டிலே வழக்கமில்லேம்மா. நீ வேறெங்கேயாவது பாரு! அதிருக்கட்டும் பச்சப்பிள்ளேன்னுப் பசும் பாலேயா போட்டறது? தாய்ப் பால்ன்னா நல்லது" என்று அடுக்கினாள் காமாட்சியம்மாள். ஐம்பது வயதாகியிருந்த முத்தாயிக்கு ஏதாவது உபதேசம் செய்ய முனைந்த வள்போ லிருந்தது காமாட்சியம்மாளின் குரல்.

முத்தாயி பதில் கூறினாள்.

"தாய்ப் பால்தான் நல்லது. ஆனால் அது தாயை முழுங்கிட்ட கொயந்தை யாச்சே. பச்சக் கொயந்தயைப் பறக்க விட்டுட்டு அந்தப் பாவி போயி நாளேயோடே நாலு மாசம் ஆவுதுங்க. இந்த நாலு மாசமாப் பூவைக் காப்பாத்தராப்போலே காப்பாத்தரேனுங்க. அவள் ஞாவத்துக்கு இதையாவது விட்டுட்டுப் போனாளே! அம்மா! இன்னி ராவுமட்டும் ஒரே ஒரு சங்கு குடுங்க பத்தும்!"

"நன்னாச் சொன்னே! கொழந்தை தாயில்லாப் பிள்ளேன்னா ஒரு புட்டிப் பாலேயாவது வாங்கி வச்சுக்கமாட்டயோ? ராத்திரிலே இப்படியா பால் பிச்சை யெடுப்பா? ராத்திரிலே பால் தர்ரது நம்பவீட்டுச் சம்பிரதாயமில்லே. காலம்பரக் கேளு. கால்படி வேணும்னாலும் தர்ரேன்!" என்று சொல்லிவிட்டு, காமாட்சியம்மாள் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

விளக்கின் ஒளி மறைந்தது. இருள் சூழ்ந்தது. சிறிது நேரம் அந்தக் கதவையே உற்று நோக்கி நின்ற முத்தாயி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, பக்கத்து வயல் மேட்டிலிருந்த தனது குடிசையை நோக்கித் திரும்பினாள். நட்சத்திர வெளிச்சம்தான் அவளுக்கு வழி காட்டிற்று.

குடிசையில் அந்த நாலு மாதத்துக் குழந்தை வீல் வீலென்று கத்திக் கொண் டிருந்தது. முரடான சாரீரத்தில் பாடி முருகன் தனது பேரக் குழந்தையைச் சாந்தப்படுத்திக்கொண்டிருந்தான். தாத்தாவின் 'ஏற்ற'ப் பாட்டுகளைக் கேட்டால் பேரப்பிள்ளையின் வயிறு நிரம்பிவிடுமா?

"சீமானும் அரிச்சந்திரன்
சீரான காசிவிட்டு
போனானும் வேத்தூரு!"
ஏலேலோ ஏலக்கொத்தா—

என்று முருகன் பாடிய ஸ்தாயிக்கு உயர்ந்த ஸ்தாயியில் குழந்தை கீச்சிட்டுக் கத்திக் கொண்டிருந்தது.

"என்னா வெறுங் கிண்ணியோடே வர்ரியே! அவுங்க படுத்துக்குட்டாங்களா?" என்று கேட்டான் முருகன்.

"இல்லே. ராத்ரிலே வெள்ளைச் சாமான் கொடுக்கக் கூடாதாம். சாத்ரம் படிக்கிறாவ அந்த அம்மா. ஏதோ அவுங்க வயக்கம்! ஓ! ஓ! ஓ! அழா தேடா வேலு! நான் தர்ரேண்டா வயித்துக்கு! ஓ! ஓ!" என்று கூறிக்கொண்டே குழந்தையண்டை குந்தினாள் முத்தாயி.

"ஆவத்துக்குக்கூடச் சாத்ரம் பார்க்கிறாவளே இவுங்க.......ஹம். அது அவுங்க வயக்கம்—கிடக்கட்டும். நீ என்னா பண்றே, கொஞ்சம் நொய்யரிசிக் கஞ்சி வச்சுத் தண்ணி கலந்து கொயந்தேக்கு குடு. இங்கே விடு அவனே எங்கிட்டே. டே! டே! அழாதேடா வேலா?" என்று கொஞ்சிக் கொண்டே குழந்தையைத் தூக்கினான் முருகன்.

அடுப்பில் ஒரு சுள்ளியை வைத்துக் கொண்டே, "அந்தம்மா சொன்னாவ. ஒரு பால் புட்டி வச்சுக்கக் கூடாதான்னு என்னைக் கேட்டாவ" என்று கூறி ஏளனமாய்ப் புன்சிரிப்புக் காட்டினாள் முத்தாயி.

"அந்தம்மாவுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். நான் வாங்கற மூணு ரூபா சம்பளம் பால் புட்டிக்குத்தான் காணும். அவுங்களுக்கு ஒண்ணும் தெரியாது. எல்லாரும் லோவத்திலே

அவுங்களைப்போல அம்பதாயிரம் ஆஸ்திக்காரங்கன்னு எண்ணிக்கிட்டாவ !" என்று கூறி, அவனும் ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

இந்த இரண்டு சிரிப்புக்களும் இரண்டு பர்லாங் தூரத்திலிருந்த எஜமான் வீட்டுக்குள் நுழையவில்லை. அந்தச் சமயத்தில் காட்சியம்மாள் தனது படுக்கையை யெல்லாம் உதறிப் போட்டுவிட்டு, தனது பாலனை எழுப்பிக்கொண் டிருந்தாள்.

"சந்திரு ! சந்திரு ! ஏந்திரு பால் சாப்பிட. தங்கமே ஏந்திருடா !" என்று எழுப்பினாள்.

* * *

காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் 'சந்திரு' கண்ணைத் துடைத்துக்கொண்டு கொல்லைப் பக்கம் போனான். தோட்டத்தின் 'கம்' என்ற வாசனை அவனை வாவென்று அழைப்பதுபோ லிருந்தது. புதிதாய் வந்த தோட்டக்காரனும் அவன் பெண்டாட்டியும் தோட்டத்தில் வேலை செய்துகொண் டிருந்தனர். சந்துருவின் கண்கள் இன்னொரு திசையை நோக்கின. அங்கே ஒரு கீத்துப் பாயின்மேல் ஓர் பாப்பா மல்லாக்கப் படுத்துக்கொண்டு காலையையும் கையையும் உதறிக்கொண் டிருந்தது. சந்திரு அந்தக் குழந்தையிடம் "ஓ பாப்பா !" என்று அழைத்துக் கொண்டே ஓடினான். சந்திருவின் வல்லனைட் பொம்மையைவிட அழகாக இருந்தது அந்தப் பாப்பா. அந்தக் குழந்தையின் கண்களும் சந்திருவின் கண்களும் ஒன்றை யொன்று சந்தித்தன. 'களுக்குக் களுக்கு' என்று அந்தப் பாப்பா சிரித்தது சந்திருவின் மனத்தைக் கவ்விவிட்டது.

"ஏ ஆளு! இந்தப் பாப்பாவை என் மடலே எடுத்துப் போடு. பாப்பாவைத் தனியா விட்டுட்டு என்னவோ செய்றேளே ரண்டு பேரும் ! நான் வெளையாட்டுக் காட்டிக்கொண் டிருக்கேன். சீக்கிரம் வா !" என்று தோட்டக்காரனை நோக்கிக் கூவினான் சந்திரு. அந்தக் குழந்தை யுள்ளத்தில் ஓடிய அந்த ஸமத்துவ அன்பு, முதல் நாள் இரவு அவன் தாயார் மனதில் ஓடியிருக்க லாகாதா? ஒரு சங்கு பாலுக்குப் பால்மாறினாளே !

* * *

இருபது வருஷங்களாகி விட்டன. இப்போது ராமச்சந்திரய்யர் சேப்பாக்கம் ஆபீஸில் முப்பது ரூபாய் குமாஸ்தாவாக வேலை பார்த்துக்கொண் டிருக்கிறார். அவர் வீட்டில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பையன் வேலன் இப்போது மௌண்ட் ரோட்டில் ஓர் 'டெய்ரி' வைத்துச் சம்பாதித்துக் கொண் டிருக்கிறான். பால்ய சிநேகமான ராமச்சந்திரய்யரை அவன் 'எஜமான்' என்றுதான் இன்னும் அழைக்கின்றான். எஜமான் வீட்டுக்கு அன்றாடம் காப்பிக்கும், குழந்தைப் பாலுக்கும், எல்லாவற்றுக்கும் வேலுப் பிள்ளைதான் பால் சப்ளை செய்து கொண் டிருக்கிறார்.

மகாத்மா காந்தி எழுதிய

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

வேலையில்லாத் திண்டாட்டம்

(ஓர் பண்டிதன் பாடியது.)

1. சாத்திரங்கள் சரிதங்கள் மன்னவர்
கோத்திரங்கள் குலங்கள் இலக்கண
சூத்திரங்கள் தொகுத்து விரித்து நான்
ஆத்திரத்தொடு கற்றதளவுண்டோ ?

2. மண்ணிலுள்ளவும் வானகத் துள்ளவும்
எண்ணி எண்ணி எழுதிய நூலெலாம்
நுண்ணிதாக நுழைந்து தெரிந்தவை
கண்ணியம் பெறுகால மெக்காலமோ !

3. வீடு விற்றும் விளைநிலம் விற்றும்மா
டாடுவிற்றும் அணிமணி தாம் விற்றும்
பாடுபட்டுப் படித்த படிப்பெலாம்
வாடுமென்பசி மாற்றிய தில்லையே !

4. பட்டம் பெற்றனன் பண்டிதர் தம்மிடம்
மட்டிலாத மதிப்புரை வாங்கினேன்
துட்டிலாது சுழன்று கிறங்குமிக்
கட்டம் நீங்கு வழியினும் கண்டிலேன்.

5. ஆயுமே லதிகாரிகள் வாழுமக்
கோயில் தோறுங்கை கூப்பித் தொழுதனன்
ஓயும் நெஞ்சக் குறுதி சொல்வாரில்லை.
ஏயும் என்விதிக் கென்செய்குவே னையோ !

6. நெஞ்சின் நூலை நினைப்பது விட்டினிப்
பஞ்சின் நூலில் பழகத்துணிகுவேன்
விஞ்சு செல்வமும் மேன்மையும் தங்குமே
கெஞ்சு வாழ்க்கையும் கேடும் ஒழியுமே.

பாப்பாச் சாமியார்

(என். பிச்சமூர்த்தி)

எனக்குச் சாமியார் என்றால் நிரம்பப் பைத்தியம். அதில் எனது நண்பர்களுக்கு ஒரு கேலி. அதற்காக என்னை 'மண்டகப்படி' செய்யாத நாளே கிடையாது.

ஒரு நாள் எனது நண்பர்களுடன் திண்ணையில் பேச்சுக் கடைத் திறக்க ஆயத்தப்பட்ட பொழுது ஒருவர் "ஏனப்பா! காவேரிக் கரையில் வந்திருக்கிறாரே, புதுச் சாமியார். அவரைப் பார்க்கவில்லையே?" என்றார். புரளி யென்று நினைத்து நான் பதில் சொல்லவில்லை. "உண்மையாகத்தானப்பா. வெகு பால்யம். ஒருவித அப்பு அழுக்கும் சொல்ல முடியாது" என்று பின்னும் சொன்னார். புரளி செய்யும் வழக்கத்தை அருங்கலையாகப் பயின்றவரே இப்படிப் பேசினாரென்றால் என்னைப் பற்றிக் கேட்பானேன்? சாமியாரைப் போய்ப் பார்த்துவரவேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டேன்.

மறுநாள் காலையில் கொஞ்சம் பசும்பாலும் சீனிக் கற்கண்டும் வாங்கிக் கொண்டு காவேரிக் கரைக்குப் போய்ச் சேர்ந்தேன். ஒரு பெரிய அரசமரத்தடியில் ஒருவர் ஒரு குழந்தையுடன் விளையாடிக்கொண் டிருந்தார். ஆ! எவ்வளவு பால்யம்! கன்னத்தைவிட்டுப் பால் கதுப்புக்கூட நீங்கவில்லை. இடுப்பில் ஒரு வெள்ளைக் கோவணம், தலை மொட்டை. அவருடைய முகத்தில் ஆனந்தத்தின் அலை பூரணமாய்த் தவழ்ந்தது. வயது பதினான்குக்கு மேல் இருக்காது. அவரைப் பார்த்ததும் எனக்குச் சுப்பிரமணிய ஸ்வாமியின் ஞாபகம் வந்தது. காலடியில் விளையாடிக்கொண் டிருந்த குழந்தை தந்தப் பொம்மைபோல் அழகா யிருந்தது. அதற்கு வயது இரண்டுக்கு மேலிராது. பாப்பாச் சாமியார் குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருந்த அந்தக்காட்சி எனக்குப் பிரும்மானந்தமா யிருந்தது.

குழந்தையைத் தரையில் விடுவதும், அரசமரத்தைச் சுற்றிச் சுற்றி நர்த்தனம் செய்வதும் திரும்பவும் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவதுமாய் இருந்தார் சாமியார். நடுவில் நடுவில் காவேரிக்கு வரும் ஜனங்களோடு விளையாடுவார். அவர்களை வாழைப்பழம் வேண்டுமென்று கேட்பார். தேங்காய் மூடி கொடுத்தால் வாங்கிக் கொள்வார். குழந்தைக்குக் கொடுத்து தானும் சாப்பிடுவார். "குழந்தைக்கு மாந்தம் வரப்போகிறதே" என்று யாராவது சொன்னால் "சாவு வரப் போகுதே என்று என்ன முன் ஜாக்ரதை உங்களுக்காக எடுத்துக்கொண் டிருக்கிறீர்கள்?" என்று பதில் கேள்வி கேட்பார். உண்மையிலும் குழந்தைக்கு ஒரு வித உபாதியும் அது வரையில் வந்த தில்லை. இருந்தாலும் எப்படியாவது இச் சிறு குழந்தையை எடுத்துக் கொண்டு போய்க் காப்பாற்ற வேண்டு மென்று நினைத்து ஊரார்களில் சிலர் இராக் காலத்தில் காவேரிக் கரைக்கு வந்தார்களாம். பாப்பாச் சாமியார் மடியின் மீது குழந்தை தூங்கிற்றாம்; சாமியார் மட்டும் விழித்திருந்தாராம். அதன் பேரில் சாமியாரைப் பார்த்தார்களாம். "அந்தச் சந்திரனைப் பிடித்துக் கொடுத்தால் இந்தச் சந்திரனைத் தருகிறேன்" என்று கை கொட்டிச் சிரித்தாராம்.

சாமியார் குழந்தைக்கு எப்படி ஆகாரம் கொடுப்பார்? என்ன கொடுப்பார்? என்று எனக்கு அறிய ஆவலா யிருந்தது. நான் கொண்டு போன பாலைக் கீழே வைத்ததும் அவசர அவசரமாக ஒரு பிறையிலிருந்து ஒரு பாலாடையை எடுத்துக் குழந்தைக்குப் பால் புகட்டினார். அப்பொழுது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! ஆ! என்ன தாயன்பு!

இவர் யார்? இவரிடம் குழந்தை எப்படிச் சிக்கியது என்ற இரண்டு விஷயமும் ஒருவருக்கும் தெரியவில்லை. அவருடைய சுய கதையைக் கேட்கலாம் என்று "என்ன பாப்பா! எந்த ஊர்? தாயார் தகப்பனார் இருக்கிறார்களா?" என்றேன்.

"நம்முடைய ஊர் திருச்சிற்றம்பலம். அப்புறம் தெரியுமா? அம்மையும் நீ, அப்பனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீரே, அதான்."

இந்த இரண்டு நிமிஷம் என்னுடன் பேசியது அதிகப்படி என்று அவர் உள்ளத்தில் தோன்றிவிட்டது போல், அந்த நிமிஷம் குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு தாண்டவமாடினார். "மானாட மழுவாட மதியாடப் புனலாட மறைதந்த பிரும்மனாட....." என்று பாடினார். குழந்தை மின்னல் போல் விழுந்து விழுந்து சிரித்தது. என்னை அறியாமல் நான் கூட இரண்டொரு அடி எடுத்து வைத்து விட்டேன்.

சாமியார் சற்று அசதி அடைந்து உட்கார்ந்ததும் மறுபடி விசாரித்தேன்." விடமாட்டீர்களா—அந்தப் பேச்சை? ....ஹூ....இரண்டு நாளுக்குள் தாயார், தகப்பனார், அண்ணன் தம்பி அவ்வளவு பேரும் போய் விட்டார்கள்—கால்ராவில் நானும் இந்தத் தம்பியும்தான் பாக்கி...........அவ்வளவு தெரிந்தால் போதும்" என்று ஆகாயத்தை நோக்கினார். கண்ணில் இரண்டொரு நீர்த் துளி சேர்ந்தது. மறு கணத்தில் ஏதோ நினைத்துக் கொண்டு "தாயார் ஏது? தகப்பனார் ஏது? எல்லாம் மாயை, உண்மை எது வென்றால்

ஆனந்தம் பரமானந்தம்
ஆனந்தம் பிரும்மானந்தம்"

என்று சொல்லிக் கொண்டு குதிக்கத் தொடங்கிவிட்டார்.......

அடுத்த நாள் அவரைப் போய்ப் பார்க்க எனக்கு அவகாசமில்லை. ஆனால் அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்கள் வரையில், நான் ஆபீஸுக்குப் போகும் பொழுதாவது திரும்பி வரும் பொழுதாவது அவர் என் கண்ணில் பட்டுக்கொண் டிருந்தார். அதுவே எனக்குத் திருப்தி அளித்தது. அதற்குப் பிறகு சாமியார் என் கண்ணில் படவில்லை. அதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்று நான் நினைக்கவில்லை. அவரும் "சித்தம் போக்குச் சிவம் போக்கு" வகுப்பினர்தானே!

மறு ஞாயிற்றுக்கிழமை எனது நண்பர் ஒருவர் "கேட்டீரா? உங்கள்

பாப்பாச் சாமியார் குழந்தை இறந்து போய் விட்டதாம் நேற்று. சாமியார் மடியில்தான் இருக்கிறதாம். அதை எடுத்து அடக்கம் செய்யச் சாமியார் இடம் தரமாட்டேனென்கிறாராம். சாமியார் முகத்தைப் பார்க்க வேண்டுமே, மஹா கண்டிராவியாய் இருக்கிறது! யாராவது பிடிவாதம் செய்தால் 'குழந்தை தூங்குகிறது—நல்ல தூக்கம். கூட்டம் போட்டுச் சத்தம் செய்யாதீர்கள்' என்கிறார். அவருக்கு பிரமை பிடித்திருக்கிறது. காவேரியில் ஒரே கூட்டம்" என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் விழுந்தடித்துக் கொண்டு காவேரிக் கரைக்குச் சென்றேன். ஒரே கூட்டம். பெண்களில் சிலர் கன்னத்தில் கை வைத்து நின்றார்கள்; சிலர் கண்ணீர் விட்டார்கள். ஆடவரில் பலர் விழியாடாமல் நின்று கொண்டிருந்தார்கள். பாப்பாச் சாமியார் மட்டும் குழந்தையின் உயிர் மணம் மறைந்து மண்ணாகி விட்டதை நம்பவில்லை போலும்! ஏனென்றால், தூங்கும் குழந்தையைத் தாய்மார்கள் அடிக்கடி பார்ப்பதுபோல் இவரும் மடியிலிருந்த உருவத்தைப் பிரேமையுடன் கவனித்துக்கொண் டிருந்தார்.

இரண்டு மணி நேரம் சென்றது. கூட்டத்தில் புதிதாக வந்த சிலர் தங்கள் சாமர்த்தியத்தைப் பிரயோகம் செய்து பார்த்தார்கள். சாமியார் அழுதார். "தூங்குகிற இடத்தில் வம்பு செய்கிறார்களே" என்றார். ஒருவரும் அசையும் வழியாயில்லை. அதன்பேரில் வெறி கொண்ட நாய்போல் இரண்டொருவரைக் கடிக்கத் துவக்கினார்.

ஜனங்கள் மறுபடியும் ஆலோசித்தார்கள். கடைசியாக யாரோ ஒருவர் போய் ஒரு போலீஸ்காரனை அழைத்து வந்தார். பிறகு பாப்பாச் சாமியார் சும்மா இருந்தார். உடனே ஊர் ஜனங்கள் குழந்தையை மயானத்துக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். பாப்பாச் சாமியாரும் மௌனமாய், உயிருள்ள நிழல்போல் கூடவே சென்றார். சடங்குகள் முடிந்ததும் ஊரார்கள் திரும்பினார்கள். பாப்பாச் சாமியார் மட்டும் சுடலையில் அப்படியே உட்கார்ந்திருந்தார். அவருடைய கண்கள் மூடியிருந்தன. ஊருக்கு வரும்படி நாங்கள் பலவிதம் அழைத்தும் அவர் காதில் விழவில்லை.

அன்று பகல் முழுதும் வெயிலில் சாமியார் அப்படியே உட்கார்ந்திருந்ததாக வெட்டியான் சொல்லுகிறான். அன்று இரவும் அவர் அப்படியேதானிருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஏனெனில் குழியில் பால் வார்த்தவர, சிலர் அங்கு மறுநாள் போன பொழுது சாமியார் முன் போலவே உட்கார்ந்திருந்தார். எங்களுக்கெல்லாம் துக்கம் தாங்கக்கூடவில்லை.

அப்படியே அவரை விட்டு விட்டால் குழந்தை போன வழி இவரும் போய் விடுவார் என்ற பயம் எங்களுக்குப் பிறந்தது. ஆனால் இன்னது செய்வதென்று புரியவில்லை. திடீரென்று எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. "ஏன் பாப்பா! காவேரிக் கரையில் குழந்தை தூங்கி எழுந்திருந்து அழுகிறதே? இங்கே ஏன் உட்கார்ந்திருக்க வேண்டும்?" என்றேன்.

சாமியாரின் கண்கள் மலர்ந்தன. ஏதோ ஞாபகம் செய்து கொள்பவரைப் போல் சுற்று முற்றும் பார்த்தார். கனவிலிருந்து விழித்தவர் போல் "என்ன? என்ன?" என்றார். காவேரிக்கரையில் குழந்தை அழுகிறதென்று மறுபடியும் சொன்னேன். சாமியார் எழுந்திருந்தார். பசுப்போல் "ஸாப்பாக" எங்களுடன் வந்தார்.

காவேரிக்கு வந்ததும் அவருக்கு ஸ்நானம் செய்து வைத்தேன். பிறகு தெருக் கோடியில் உள்ள வீட்டிற்குள் மெதுவாய் அழைத்துக் கொண்டு போனேன். அந்த வீட்டிலிருந்த குழந்தையைப் பார்த்ததுதான் தாமதம். "ஓ! ஓ!! தூங்கி எழுந்திருந்து விட்டாயா? பொல்லாது" என்று கை கொட்டித் தாண்டவமாடினார். குழந்தையை வாரி எடுத்து முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சினார், முத்தமிட்டார், சிரித்தார். குழந்தையும் சிரித்தது.

இப்படியே இருந்தாற்போலிருந்து திடு திடுவென்று தெருப்புறம் ஓடினார். எங்களுக்கொன்றும் புரியவில்லை. வெளியே வந்தோம். பாப்பாச் சாமியார் எதிர் வீட்டிற்குள் சென்று அங்கே தொட்டிலில் இருந்த குழந்தையைப் பார்த்து விளையாடினார், சிரித்தார், எழும்பி எழும்பிக் குதித்தார். சாமியாருக்குப் பால் கொண்டு வருவதற்காகப் பெண்கள்சமயலறைக்குள் போய் விட்டுத் திரும்பி வருமுன் சாமியார் ஓடிவிட்டார்.

பிறகு அடுத்த வீடு. அங்கும் இதே மாதிரி. அதற்கடுத்த வீடு, அதற் கடுத்த வீடு, அதற்கும் அடுத்த வீடு. எங்கும் இதேமாதிரி. சாமியாருக்கு சந்தோஷம் தாங்கவில்லை. "அடாடா! எத்தனை தம்பிப் பாப்பா! எத்தனை தம்பிப் பாப்பா! ஒரு பாப்பாவுக்கு எத்தனை குழந்தை கிடைத்திருக்கிறது!" என்று கை கொட்டிச் சிரித்தார்.

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம்: 41, பிராட்வே.



4, சல்லியன்ஸ் கார்டன், மயிலாப்பூர்.

சலவை முதல்தரமாயிருக்க வேண்டுமா? சுத்தமாய் உலர்த்தித் தர வேண்டுமா? சாயம் கெடாமல் வெளுத்துக் கொடுக்க வேண்டுமா? வேண்டுமானால், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளைப் போடுங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவசச் சலவை.

சென்னையில் 'ஸீதா கல்யாணம்'

(சங்கு. ஸுப்ரஹ்மணியன்)

புதிதான கற்பனைக் கதையொன்றை நடித்தால் பெரும்பாலோர் 'கதை மேலே எப்படிப்போகிறது' என்பதைக் கவனிப்பதிலேயே கருத்தைச் செலுத்தி விடுவார்கள். ஆனால் சபையோரனைவரும் அறிந்த பழைய கதையை நடித்து அதில் 'மார்க்' வாங்குவதுதான் சிரமம். அப்போதுதான் நடிகர் திறமைகளைப் பற்றியும், காட்சி ஜோடிப்புகளைப் பற்றியும் ரஸிகர் கூர்ந்து கவனிப்பார். அத்தகைய கூர்மைக் கண்கள் சென்ற ஞாயிறன்று சென்னை பிராட்வே டாக்கீஸில் திரையை உற்று நோக்கிக் கொண்டிருந்தன. ப்ரபாத் கம்பெனியார் எடுத்துள்ள ஸீதா கல்யாணம் என்ற தமிழ் 'டாக்கி' அன்று குறிப்பான ரஸிகர் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டது. "இதுவரை தமிழ் நாட்டில் வந்துள்ள ஒலிப்படங்களெல்லாவற்றினும் இதுவே சிறந்தது" என்பதுவே எல்லா ரஸிகர்களின் கருத்துமாகும்.

பால்யத்தினின்று யௌவனத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கும் வயதினன், கல்யாணக் கதைக் கேற்ற பருவத்தினன், * சரீரம் மட்டுமின்றிச் சாரீரத்திலும் அழகுடையவன், சென்னைச் சங்கீதப் போட்டியில் பரிசும் பெற்றவனான சிரஞ்சீவி ராஜம் இந்த ஒலிப்படத்தில் ராமனாக வருகின்றான். துளியாவது அதிகப் பிரசங்கித்தனமின்றியும் ஆனால் கம்பீரம் துளியும் குறையாமலும் ராம லட்சணங்களுக்குப் பொருத்தமாக இச்சிறுவன் நடிப்பது யாரைத்தான் வசீகரிக்காது?

ஸ்ரீ ராஜத்தின் சகோதரியான ஸௌபாக்கியவதி ஜயா இந்தப் படத்தில் ஸீதையாக நடிக்கின்றாள். இதிகாச கன்னிகையை அநுகரிப்பதற்கு ஏற்ற எழில்; புன்னகை தவழும் உதடுகள்; அதனின்று அவ்வப்போது கொஞ்சல் பேச்சுக்களும் கோகிலப் பாடல்களும் புறப்படுகின்றன. இந்துஸ்தான் பியாக் ராகத்தில் 'உல்லாசமாகப் பந்தாடுவோமே!' என்ற பாடலைப் பாடிக்கொண்டு ஸீதை தனது சகோதரிகளோடு விளையாடியது கவிதா சித்திரமாகவே தோன்றிற்று. குழந்தை ஸரஸா இந்தப் படத்தில் ஊர்மிளையாக வருகின்றாள். அவளது கலகல வென்ற

* தமிழ் நாட்டு நாடக மேடைகளில் பன்னிரண்டு வயதுப் பையன் 'பெரிய கிழவனாகவும் 40 வயதுக்காரன் துருவனாகவும் மார்க்கண்டனாகவும், இன்னொரு பெரியவர் 'குழந்தை ஞானசவுந்தரியா'கவும் தோன்றும் விபரீதங்களைப் பார்த்திருக்கின்றோமல்லவா? அவ்வாறெல்லாம் இன்றிப் பொருத்தமான ஆக்டர்களைப் பொறுக்கியெடுத்த ஸ்ரீயுத சேஷகிரியைப் போற்றாதிருக்க முடியவில்லை.

['ஸீதா கல்யாணம்' என்ற ஒலிப்படத்தில் ஸீதையாக நடிக்கும் ஸௌபாக்கியவதி ஜயாவின் ஒரு தோற்றம்.]

இயற்கைச் சிரிப்பையும் குறும்புக் கண்களையும் கவனித்து அவளுக்கு இந்த ஒலிப்படத்திலும் நல்ல இடங்கள் தரப்பட்டிருக்கின்றதே அதுதான் விந்தை. லட்சுமணனாக ஆக்ட் செய்யும் பாலன் குஞ்சிதன், "குங்கும சந்தன லேபித லிங்கம்' என்ற பாடலைப் பாடியபோது தமிழ்நாட்டின் வருங்காலத்தில் இவனும் ஒரு 'புள்ளி' யென்பது தெரிர்து விட்டது. சின்னப் பாப்பா இந்தப் படத்தில் 'கஞ்சிரா' வாசித்துக்காட்டி ரஸிகரின் ஆசீர்வாதத்தை வாரிக் கட்டிக்கொண்டு விட்டான். இந்தக் குழந்தைகளெல்லாம் நீடூழி வாழ்க.

இந்த ஒலிப்படம் இவ்வளவு கௌரவமான முறையில் இருப்பதற்கு முக்கிய காரணம் அத்தனை ஆக்டர்களும் 'அமெச்சூர்' ஆக்டர்கள். தொழிலாக இல்லாமல், நடிப்புக் கலையை விருத்தி செய்வதே நோக்கமாகக் கொண்டவர்கள். என்னைக்கூட ஒரு காலத்தில் நாடக அரங்கத்தில் ஏற்றி ஆக்ட்செய்யுமாறு சொல்லிக் கொடுத்த ஸ்ரீயுத டி. வீ. சீதாராமய்யர் இதில் தசரதராக வருகின்றார். வயதாகிவிட்டபோதிலும் அவர் சாரீரத்தின் குளுமை மறையவில்லை. எனது பள்ளித் தோழர் ஸ்ரீயுத ஜி. கே. சேஷகிரி—நாடக உஜ்ஜீவன சபையின் காரியதரிசி—இராவணேச்வரனாக வருகின்றார். விகாரமோ, அசங்கியமோ, அதிகப் பிரசங்கித்தனமோ இல்லாமல் எல்லோரும் ஆக்ட் செய்கின்றார்கள். மேனாட்டு 'நட்சத்திரங்க'ளைப் போல, சபையோர் அறியும்படி தோரணையாகப் பேசுவதற்கும், பாட்டைப் புரியும் வண்ணம் பாடுவதற்கும் இன்னும் சில படங்களில் பழக்கம் பெற்றால், இவர்கள் பூரணத் திறமை பெற்றுவிடுவார்கள் என்பது திண்ணம்.

தற்காலத்துத் தமிழனை வசீகரிக்க ஹாஸ்ய ரஸம் ஒன்றினால்தான் முடியுமென நினைக்கின்றவர்களின் கருத்தையும் இந்தப் படம் மாற்றிவிட்டது. சீதையின் சிங்காரக் காதல், ராமரின் யாக ஸம்ரட்சண வீரம், மோகினியிடம் வசப்படாத முனிவரின் சாந்தம், கல் பெண்ணாகியபோது ராமன் கண்களில் கருணை, சுயம்வரத்தில் தற்புகழ்ச்சி வீரர்கள் வில்லின் முன் நாணும்போது குற்சை, வில்லை முறிக்கும் அற்புதம், முனிவர்களுக்கு அரக்கர்களிடம் ஏற்பட்ட பயம், கதை ஆரம்பத்தில் விசுவாமித்திரனின் கோபம் இவை போன்ற நவரசங்களைக் காட்டுவதற்கும் ஏற்ற பால ராமாயணப் பகுதியை எடுத்துக்கொண்டது போற்றத்தக்கது. நவரஸங்களையும் நடித்துக் காட்டத் தமிழருக்குத் திறமையுண்டு என்பதை இப்படம் காட்டிவிட்டது. நாம் பேசும் போதுள்ள இயற்கைத் தொனியை மறந்து தமிழ் நாடக மேடையிலிருப்பது போலவே ஸ்வரம் போட்டு நடிகர்கள் பேசவேண்டுமா என்பது ஒரு சந்தேகம். இந்தச் சிறு குறையையும் அடுத்த நடிப்பில் ஆக்டர்கள் போக்கிக் கொள்வார்களென்று நம்புகின்றேன்.

இந்த ஒலிப் படத்தின் பெருமையில் முக்கால் பங்கு கதைக்குக் காட்சி ஜோடித்துத் தந்த அறிஞருக்கே சேர்ந்தது. மேனாட்டுப் படங்களின் ஜோடனைக்கு நிகரானது இந்தப் படமும். வால்மீகியாரின் சித்திரத்தினின்று வழுவாமலும், எதிர்பார்த்ததற்கு அதிகமாகவும் தர்பார்க் காட்சிகள், கானகக் காட்சிகள், நந்தவனங்கள், யாகசாலை யாவும் இருக்கின்றன. கோல்ஹாபூர் சமஸ்தானத்தினர் சதுரங்க சேனையையும் இந்தப் படமெடுக்கும்போது கொடுத்து உதவினார்களாம். ஜோடிப்பின் (Setting) உன்னதத்திற்குக் கேட்க வேண்டுமா? ஒலியெடுக்கும் கருவியும் சுத்தமாகவே வேலை செய்திருக்கிறது. காமிராக்காரர் படத்தை வெகு துல்யமாக எடுத்திருக்கிறார். விஷம சித்திரங்களை எடுப்பதிலும் இவர் காட்டியுள்ள திறமைகள் படம் பார்க்கும் பாலருக்கும் இனிமை யூட்டுவதாகும். கதையைப் பாங்காக அமைத்துத் தந்தவரும் நல்ல திறமைசாலிதான். அவர் சிருட்டித்துள்ள சிற்சில காட்சிகள் சம்பந்தமாக அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. ஒரு கிழவரை விளையாட்டுத் தனமாகக் குட்டையில் தள்ளுவதற்குச் சீதாதேவி உடந்தையா யிருந்ததாகச் சித்தரிக்கலாமா என்பது ஒன்று. ராமனைக் கல்யாணஞ் செய்து கொள்ளச்சொல்லித் தாயார் 'பரிகாசம்' செய்யலாமா என்பது வேறொன்று. படத்திற்கான பேச்சுக்களை அமைத்துத் தந்தவரும் இன்னொரு முக்கிய விஷயத்தை அறிந்து கொண்டாரானால் நல்லது. படிப்பதற்கான் பாஷை வேறு; நடிப்பதில் ஸ்வாரஸ்ய மூட்டத்தக்க பாஷை வேறு. சர்வ சாதாரணப் பதங்களாக நமக்குத் தோன்றும் வார்த்தைகள் நடிகன் வாயினின்று வரும்போது மிக்க பொருளுடையதாகி விடக்கூடும் என்பது ஓர் ரகஸ்யம். பாட்டுகளை எழுதித் தந்தவர் இவ்வளவு வடநாட்டு மெட்டுக்களை உபயோகப்படுத்தியிருக்கவேண்டாம், கர்நாடக ராகங்களையே கையாண்டிருக்கலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம். இந்த ஒலிப் படத்தில் பக்க வாத்தியக்காரர்கள் இன்னும் கொஞ்சம் அடக்கி வாத்யங்களை வாசித் திருப்பார்களானால், மேலும் அழகா யிருந்திருக்கு மென்று தோன்றுகிறது. இதெல்லாம் இப்படத்திலுள்ள நுட்பமான மிகமிகச் சின்னக் குறைகள்.

இத்தனை குறைகளையும் அடியோடு மூடிவிடுகின்றன இந்தப் படத்தின் காட்சி ஜோடனைகளும், கதையின் போக்கும், நடிகர்களின் கௌரவமான நடிப்பும். இத்தகைய படத்தைப் போல இன்னும் அநேக படங்களை இதே கோஷ்டி தயாரித்துத் தமிழ் ஒலிப்படத்திற்கு உலகில் ஒரு ஸ்தானமேற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கலைமகள்

ஓர் உயரிய மாதப்பத்திரிகை

5-ம் தொகுதி

ஆரம்பம் தைமீ (January 1934).

வருடச் சந்தா (தபால் செலவுடன்)

இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூ. 4
பினாங், சிங்கப்பூர், நேடால்	ரூ. 6
தனி சஞ்சிகை அணா—6	35 சதம்

விளம்பர விகிதம்

முழுப் பக்கத்திற்கு ஒரு தடவைக்கு ரூ. 15

அரைப் பக்கத்திற்கு ஒரு தடவைக்கு ரூ. 9

அட்டைப் பக்கங்களுக்குத் தனி விகிதம்.

"கலைமகள்" பத்திரிகைக்குச் சந்தாதார்கள் சேர்க்கவும், "கலைமகள்" பிரசுரங்கள் விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை.

"கலைமகள்" சந்தாதார்க்கு மாத்திரம் அநேகம் அரிய தமிழ் நூல்கள், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

கலைமகள் ஆபீஸ்,

மயிலாப்பூர், சென்னை.



பூகம்பம்

(காளிதாசன்)

[இவ்வுலகம் உண்டாகிறது; வளர்கிறது; அழிகிறது. இவை யாவும் பராசக்தியின் திருக்கூத்து. ஏன் இவ்வாறு ஆகவேண்டும் என்பது தேவ ரகஸியம். மனிதனது மூளை—கிளைக்கு அங்கு இடமில்லை. சிலர் இதனை இயற்கையின் கோபம் என்பர். வேறு சிலர் தெய்வத்தின் சீற்றம் என்பர். மகாத்மாஜீ நமது தீண்டாமைப் பாவத்தின் விளைவு என்கிறார். அவர் கூறுவதுதான் சரி. ஆனால் பாவத்திற்குத் தண்டனையாகுமா இது? நாம் பாவம் நீங்கி நல்வழிப் படுவதற்காகத் தேவி செய்த அருட்கனல் இது! தேவியின் வெறுஞ் சீற்றம் என்பது தப்பு. அன்னையின் கண்ணியச் சீற்றத்தின் கருணை என்று கூறவேண்டும். இதுதான் இப்பாடலின் உட்கருத்து. —காளிதாசன்.]

1

ஆகா! அவ் வடநாட்டில் மிதிலைத் தேசம்
அவனி மகள் குலுக்கிவிட்டாள் அழிந்ததெல்லாம்
ஓகோ! இஃதுகப் புரட்சி ஊழிக் கூத்து
உன்மத்த வெறியாட்டு உலவாச் சூட்சி
மாகாளி பராசக்தி நடன வேகம்
மடமடவென் றுடைந்ததுபார் மாடகூடம்
போகாத வாழ்வெல்லாம் புகைஞ்சு போச்சு
புன்மையாய்ப் பறக்காடாய்ப் புழையாய்ப் போச்சே!

2

இடிக்கிடிபோல் வெடித்ததொரு குமுறல் பாய்ந்து
எங்கணுமே நடுநடுக்கிச் சாய்த்ததெல்லாம்
திடுக்கெனவே புள்ளமெலாம் மேடாய்ப் போச்சு
திசையளந்த மலைகளெலாம் மடுவாய்ப் போச்சு
வெடுக்கெனவே வீடெல்லாம் காடாய்ப் போச்சு
வீதியெலாம் கற்குவியல் பிணத்தின் குப்பை
படக்கெனவே ஒரு கணத்தில் தேசமுற்றும்
பாழடைந்து வேரறுந்து பதறிப் போச்சே!

3

கங்கையவள் ஒருகணத்தில் வறண்டு போனாள் *
கதிமீறி மறுகணத்தில் பொங்கிவிட்டாள்
மங்கைமார் சூலுற்ற குழந்தை வாழ்ந்த
வளைய வந்த குழந்தையெலாம் புதைந்துபோன
சிங்கமெனத் திறலுடைய இளைஞர் மாய்ந்தார்
செங்கற்கீழ்க் கிழவியர்கள் பிழைத்துக்கொண்டார்
துங்கமுறும் மச்செல்லாம் இடிந்து வீழ்ந்த
துளையுண்ட குச்சதுவோ மடியவில்லை.

4

வான்முட்டும் பெருமரங்கள் சிதைந்துபோன
மண்படர்ந்த செடிகொடிகள் மாயவில்லை
கோன்சிகர மலைப்பாம்பு பிதுங்கிச் செத்த
குற்றெலியும் சிறுபுழுவும் குமையக்காணோம்
தானெனவே செருக்குற்ற மனித ஞானம்
தவிடுபொடி யாயிற்றுத் தடுக்கவொண்ணாத்
தீனராய் ஏழையராய் எளியராகித்
தீர்ந்தனரே அவலமாய்த் திகைத்துப்போனார்.

5

ஐயையோ! பூதலத்தின் அவதி நோக்கி
அந்தரத்து வானமெல்லாம் இருண்டுபோன
நொய்யராய் மானுடர்கள் நோதல் கண்டு
நொந்துமழைக் கண்ணீரால் உலகம் தூர்த்த
வையத்தால் மொத்துண்டு காற்றுச் சூறை
வானெழும்பி மண்புரட்டி வளைய வந்த
வெய்யதொரு எமனுடைய விளையாட்டல்லால்
வேறொன்றும் கிடையாத வெறுமையாச்சே.

6

வெறிநாயொன்று எலிபிடித்துக் குலுக்கல்போல
விண்குலுக்கி பண்குலுக்கி நீர்கள் யாவும்
திறுகுறவே நிலைகுலுக்கி மலைகள்சாடித்
திக்கெல்லாம் திகந்தமெலாம் குலுக்கிப் பேயாய்க்
கிறுகிறுத்துக் காளியம்மை வையைத் தேவி
கிராதகி சாம்பவி வீரி கராளி யாத்தாள்
மறுகுறுங் கண்ணியச் சீற்றக் கருணையோடு
மண்ணொன்றோ பரதர் மனம் குலுக்கித் தீர்த்தாள்.

7

போனவர்தாம் போகட்டும் இருப்போரெல்லாம்
புகைந்தழுங்கும் கோரத்தைச் சொல்லப் போமோ
கூனிப்போய்க் குறுகிப்போய் மாந்தர் யாரும்
கூழுக்கும் ஆடைக்கும் குமைகின்றார்
ஆனிரைகள் தோட்டங்கள் வயல்கள் வீடு
யாவையுமே புதைந்ததனால் அலக்கண் உற்றார்
தீனரானோம் இழந்த உயிரின் பெற்றித்
தீராயிப் பெருந்துயரால் திரும்பப் பெற்றோம்.

8

விதை வெடிக்கச் செடியாகும் செடியின் கொம்பில்
விரிந்த மலர்க் கனியாகக் குலைந்து வீழும்
பதைபதைத்த துன்பமெலாம் பார்க்கப்போனால்
பரிபூரணத்திற் கோர் பாதையன்றோ?
குதிகுதித்த பூகம்பக் கொடுமையாகக்
குவலயத்தை அழித்திடுவாள் மழையாய்க் காப்பாள்
எதையென்ப தையன்னைச் செயல்களெல்லாம்
ஈஸ்வரியின் அருட்கனலின் வேகந்தானே!

[* முன்னொருக்கால் கங்கையன்னை முக்கண்ணன் சடைமுடியில் ஒரு கணத்தில் மறைந்தாளென்ற கதை மீண்டும் நடிக்கப்பட்டது போலும்! —சங்கு ப-ர்.]

துளசிதாஸர் நன்மொழிகள்

[பதினாறும் நூற்றாண்டில் பண்டா என்னும் ஜில்லாவில் ராஜபுரம் என்ற கிராமத்தில் ஓர் ஏழைப் பிராமணர் குலத்தில் துளசிதாஸர் பிறந்தார். ராமானந்தர் என்னும் முனிவரிடம் சிஷ்யராய் இருந்தார். இவர் அநேகம் கவிகள் எழுதி யிருக்கிறார். ஹிந்தி பாஷையில் இவர் எழுதிய கவி எல்லோராலும் போற்றப்படுகிறது. இவர் எழுதிய கவிகளில் பக்தி ரஸமும், தத்துவ ஞானமும் ததும்புகின்றன.

—P. ராஜகோபாலய்யர்.]

1. நன்மை செய்வோன் நன்மையை அடைகிறான். தீமை செய்வோன் தீமையை அடைகிறான். அமிர்தத்தை உண்டால் நிரந்தரமாய் வாழலாம். விஷத்தை உண்டால் உடனே இறக்க வேண்டியதுதான்.

2. வீரன் தனது திறமையைச் சண்டையில் காட்டுவானே யன்றி, தன்னைப்பற்றிச் சாதாரண காலங்களில் புகழ்ந்து பேசமாட்டான். ஆனால் பேடியோ சண்டையில் புறங்காட்டியோடினாலும் பேச்சில் விட்டுக்கொடுக்க மாட்டான்.

3. அக்னியினால் பொசுக்கப்படாததும், ஓர் துஷ்ட ஸ்திரீயினால் சாதிக்கப் படாததுப், காலத்தினால் கொண்டு போகப் படாததுமான வஸ்து இவ்வுலகில் ஒன்றுமே கிடையாது.

4. அதிர்ஷ்டம் என்பது கடவுள் தான். லாபமோ நஷ்டமோ, இருப்போ இறப்போ, வியாதியோ அபக்கியாதியோ, எல்லாம் கடவுளின் விருப்பப்படியே நிகழ்கின்றன.

5. கெடுதலான கிரஹத்தினால் பீடிக்கப்பட்டவனுக்கும், புயல் காற்றில் அடிபட்டவனுக்கும், தேளினால் கொட்டப் பட்டவனுக்கும், மதுவினால் மயங்கி இருப்பவனுக்கும் சுகமடைய ஒரு விதமான வழியுமில்லை.

6. அமிர்தத்தைப் பற்றிக் கேட்கத்தான் முடிகிறது; ஆனால் விஷம் எங்கும் கிடைக்கிறது. அன்னப் பட்சி எங்கேயோ இருப்பதாக மட்டும் கேள்விப் படுகிறோம்; ஆந்தையும் கோட்டானுமோ எங்கும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் கடவுளின் மாயை

7. பழங்களை உடைய மரங்கள் எல்லாம் பூமியை நோக்கி வளைகின்றன. அதே போல நல்ல மனிதர்கள் ஐசுவரியத்தை அடைந்தாலும், அகங்காரமில்லாமல் பணிந்து நடக்கிறார்கள்.

8. விளக்கில் விழும் விட்டில் பூச்சியைப் போல வீணாக ஸ்திரீகளிடம் ஆசை வைக்காதே. காமத்தையும் மயக்கத்தையும் விட்டு ஒழித்துவிட்டு, நல்ல மனிதர்களுடனும் மகான்களுடனும் பழகி, கடவுளைத் தியானிப்பதில் உன் பொழுதைப் போக்கு.

9. சரியான பாதைகளை எப்படி புல் மூடிவிடுகின்றதோ அதைப் போலவே நமது வேதங்களும் அநேகம் பொய் ஆராய்ச்சியால் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

10. எப்படிச் சூரியனால் வெளிச்சமும், அது மறைந்ததும் இருளும் உண்டாகின்றதோ, அதைப் போலவே விவேகமும் நாம் பழகும் மனிதர்களுடைய குணகுணங்களைப் பொறுத்திருக்கிறது.

11. எவ்வளவு ஒழுங்காகத் தண்ணீர் பாய்ச்சினாலும் வெட்டிவிடாவிட்டால் வாழைமரம் ஒழுங்காக வளராது. அதைப்போல் கெட்ட மனிதர்களும் சிட்சிக்கப் படாவிட்டால், ஒழுங்காகத் திருந்தமாட்டார்கள்.

12. ஜனங்கள் தனக்குச் சமானமானவர்களையே நேசமாகவோ பகைமையாகவோ பாவிக்கிறார்கள். ஓர் சிங்கம் ஓர் தவளையைக் கொன்றால் அதை ஒருவரும் புகழமாட்டார்கள்.

13. விட்டில்பூச்சிகள் விளக்கில் விழுந்து சாகின்றன; கழுதைகள் சுமை சுமக்கின்றன. இதனால் அவை வீரர்களாகி விடுமோ? இல்லவே இல்லை.

14. ஓர் மனிதனைக் கொல்ல ஒரு வியாதி போதுமானது. ஆனால் காமம், அகங்காரம், ஆசை முதலிய தீராத நோய்களால் பீடிக்கப்பட்டுக் கிடக்கும் மனிதன் எவ்விதம் சமாதியில் கடவுளைத் தியானிக்கமுடியும்?

15. தண்ணீரைக் கடைந்து வெண்ணெய் எடுத்தாலும் எடுக்கலாம்; மணலிலிருந்து எண்ணெ எடுத்தாலும் எடுக்கலாம்; கடவுளைத் தியானிக்காமல் இந்த சம்சார சாகரத்தைத் தாண்டவே முடியாது.

16. "எவன் ஒருவன் வாக்கு, மனம், செய்கை எல்லாவற்றிலும் என்னைப்பற்றி நினைக்கிறானோ அவனுடைய மனதிலேயே நான் வசிக்கிறேன்" என்று கடவுள் சொல்லுகிறார்.

17. கடவுளைத் தியானிக்காமல் முக்தியடைய விரும்பும் மனிதன், புத்திசாலியாய் இருந்தாலும் ஓர் வாலில்லா மிருகத்தைப் போன்றவனே யாகிறான்.

18. இக்காலத்தில், பொய் உடுப்புக்களை உடையவர்களையும், கண்ட வஸ்துக்களைப் புசிப்பவர்களையும் ஓர் யோகியாகக் கருதுகிறோம்.

19. ஈசா! தங்கள் அன்பு சரத்கால இரவுபோல் நிஷ்களங்கமாயும், தங்கள் நாமம் அன்று இரவு பிரகாசிக்கும் சந்திரனையும் இருக்கிறது. பாக்கி எல்லாப் பெயர்களும் அன்று இரவு இருந்த நட்சத்திரங்களைப் போலத்தான். கடவுளே! தங்கள் ஊழியன் மனதில் எப்பொழுதும் வசித்தருள்க.



துரோகி!

(சிறு கதை)

ஒரு அழகான மலை இருந்தது. அதற்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு பெரிய ராஜ்யங்கள்; மலை மேலே ஒரு நகரம். இந்த நகரத்தைச் சுற்றிப் பெரிய மதில் சுவர்களும் அகழ்களும் உண்டு; நாலு வாசலிலும் வானளாவிய கோபுரங்களும் இருந்தன. உயரமான ஒரு பாறைமேல் பலமான கோட்டை ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. இந்தக் கோட்டை எத்தனையோ முற்றுகைகளைப் பார்த்திருக்கிறது.

ஆனால், இப்போது இந்த நகரத்தில் ஒரு ஞானி தோன்றினார். அவர் நீதிமான்; தயாளு; கல்விமான்; புத்திசாலி; எவருக்கும் அஞ்சாதவர். இதனால், நகர ஜனங்களுக்கு அவரிடம் மிகுந்த நம்பிக்கை உண்டாயிற்று. அவருக்குச் சர்க்கார் கொடுத்த மாஜிஸ்திரேட் உத்தியோகம் கிடையாது; என்றாலும், அநேக விவகாரங்கள் அவரிடம் பஞ்சாயத்துக்கு வந்ததுண்டு. அநேகர் தங்கள் ரகசியங்களையெல்லாம், அந்தரங்கத்தில் செய்துவிட்ட பாவங்களையெல்லாம்கூட, அவரிடம் வந்து சொல்லி, மனங் கசிந்து, அழுதிருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் சமாதானப்படுத்தி, நல்வழிக்கு மார்க்கம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். நகரத்துக்கே பெரிய நெருக்கடியாவது ஆபத்தாவது வந்தால், ஊர்ப் பெரியவாகள் அவரிடம்தான் வந்து யோசனை கேட்பார்கள். இப்படிப் பல வருஷங்கள் கழிந்தன.

ஒரு சமயம் மலைக்கு இரு பக்கத்திலுமிருந்த ராஜ்யங்களில் செல்வம் அதிகமாய்ப் போய்விட்டதி; ஜனங்கள் ரொம்பச் செழித்து விட்டார்கள். இதனால் தினவெடுத்த இரண்டு ராஜ்யங்களும், ஒன்றோடொன்று பெரிய பெரிய யுத்தங்கள் நடத்தின. இவற்றின் பயனாய்ப் பஞ்சமும் நோயும் தோன்றின. ஒரு வேளை இந்த ராஜ்யத்துக்கு ஜயம் கிடைக்கும்; இன்னொரு தடவை அந்த ராஜ்யம் வெற்றி சூடும். யார் தோற்றாலும் யார் ஜயித்தாலும் சரி; எப்போதும் அந்தந்த ராஜ்யத்தின் ராஜாவையும் சேனாதிபதியையும் அந்தந்த ராஜ்யத்து ஜனங்கள் பிரமாதமாய்க் கொண்டாடியே தீருவார்கள்.

இந்த விவகாரங்களிலெல்லாம், மலைமேலிருந்த நகரம் கலந்து கொள்ளவேயில்லை. ஏனென்றால், அந்த ஞானி மலை ஜனங்களைத் தடுத்து வைத்திருந்தார்.

ஒரு நாள் நகரத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்து விட்டது. இதனால், நகர் முழுதும் அல்லோ கல்லோலப்பட்டது. பெரிய ராஜாக்களில் ஒருவன் இந்த நகரத்தின்மீது படையெடுத்து வந்துவிட்டான். சில மைல் தூரத்தில் சேனையோடு அவன் கூடாரம் அடித்திருந்தான்.

இந்த நகரத்தின்மேல் அவனுக்கு என்ன கோபம்? அவன் ராஜ்யத்தைச் சேர்ந்த சில சிப்பாய்கள் ஒரு நாள் சாயங்காலம் உல்லாசமாக இந்த மலைப் பக்கம் வந்தார்களாம். இந்த மலை ஜனங்களில் சில பேரோடு, மதுவைக் குடித்துக் கேளிக்கையாக விருந்தார்களாம். அப்போது, ஒரு சண்டை ஏற்பட்டதாம். இந்த அடிதடியில் நாலு சிப்பாய்கள் மடிந்து விட்டார்களாம். தனது சிப்பாய்கள் இப்படிச் செத்துப்போனதைக் காலையில் கேள்விப் பட்ட ராஜா, "அற்ப மலைவாசிகளுக்கு இவ்வளவு கர்வமா? இதோ அரை நொடியில் அவர்களை அழித்து விடுகிறேன்" என்று, யுத்தசன்னத்தனாய் வந்து விட்டான்.

மலை ஜனங்கள் பீதியடைந்து, ஒரே கூட்டமாய் ஞானியிடம் வந்து சேர்ந்தார்கள்.

ஞானி, அருள் ஒழுகும் கண்ணோடு தலை நிமிர்ந்து, சொல்லலானார்:—"நான் நகரத்தைக் காப்பாற்றிவிட முடியும்; ஆனால், என்னைத்தான் நான் காப்பாற்றிக்கொள்ள முடியாது. நான் சொல்லுகிறபடி நீங்கள் கேட்கவேண்டும். கேள்வி கேட்கக் கூடாது."

ஊர்ப் பெரியவர்களுக்கு மனசில் தென்பு வந்தது. "ஆஹா! அப்படியே செய்கிறோம்" என்றார்கள்.

"உடனே ஓடுங்கள். நகரத்தில் உள்ள அத்தனை சாராயத்தையும், சகல ஆயுதங்களையும், இங்கே கொண்டு வாருங்கள்" என்றார் ஞானி. அவ்விதமே, வில், வாள், ஈட்டி, அம்பு முதலிய அஸ்திர சஸ்திரங்களையும், கள் சாராயம் முதலிய பானவகைகளையும் கொண்டுவந்தார்கள்.

மறுபடியும் ஞானி சொல்லுகிறார்:—"நீங்கள் ஒருவரும் இங்கே யிருக்கக் கூடாது. நமது கோட்டை வாயிற்படிக் கதவுகளையும் தகர்த்து எறிந்துவிட வேண்டும். சீக்கிரம் போங்கள்."

ஜனங்களுக்கு இதெல்லாம் அதிசயமாய் இருந்தது. என்றாலும், ஞானி சொன்னபடி கோட்டை வாயிற்படிகளையெல்லாம் த்வம்சம் செய்து, ராஜபாட்டையாகத் திறந்துவிட்டார்கள். எதிரி இப்பொழுது சமீபமாக வந்து கொண்டிருக்கிறான். அவனுடைய சேனை வீராவேசத்துடன் வரும் வேகத்தில் கிளம்பிய புழுதி, ஆகாயமெல்லாம் நிறைந்து, இருள்மயமாய்க் கவிந்துவிட்டது. இதைப் பார்த்துப் பீதியுடன் நின்றுகொண்டிருந்த ஜனங்கள் இருக்குமிடத்துக்கு ஞானி வந்து சேர்ந்தார்.

"இனி என்ன செய்ய வேண்டும்?" என்று ஜனங்கள் கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை" என்றார் ஞானி.

ஜனங்களுக்குப் பயம் பிடித்தது; சந்தேகம் ஜனித்தது. "ஏமாற்றாதே; சொல்லு நிஜத்தை" என்று ஞானியைப் பார்த்து, எல்லாரும் ஏகோபித்துக் கத்தினார்கள்.

ஞானி மௌனமாக, மதுவும் ஆயுதமும் குவிந்த கோட்டையைச் சுட்டிக் காட்டினார். ஜனங்கள் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அங்கு வானளாவிய அக்னி, ஜ்வாலை விட்டு எரிவதைக் கண்டார்கள். ஜனங்களின் தேகமெல்லாம் பயத்தால் வெட வெடத்தது. பயம் சற்றுத் தணிந்ததும், ஆத்திரம் பொங்கிற்று. ஆளுக்கொரு 'தடியும் கல்லும் பொறுக்கிக் கொண்டு, "துரோகி! துரோகி!" என்று கூக்குரல் போட்டு, ஞானியை நையப் புடைத்துக் கொன்றுவிட்டார்கள்.

இதே சமயத்தில் எதிரி ராஜா கோட்டை வாசலுக்கு வந்துவிட்டான். வாசல் விசாலமாய்த் திறந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். உள்ளே நுழைந்தான். எதிர்ப்பவர் எவரையும் காணோம். "மலைவாசிகள் எங்காவது பதுங்கியிருந்து திடீரென்று தாக்குவார்களோ, அல்லது இதெல்லாம் இந்திரஜாலமா?" என்று பலவாறு எண்ணினான். ஆனால், அப்படியொன்றுமில்லை

யெனக் கடைசியில் தெரிந்துகொண்டான்.

எதிரி ராஜா மலைவாசிகளில் ஊர்ப் பெரியவர்களை வரவழைத்தான். "ஏன் உங்கள் சிப்பாய்கள் எங்களை எதிர்க்கவில்லை? இதெல்லாம் என்ன?" என்று கேட்டான்.

ஒரு பெரியவர் முன்னுக்கு வந்தார். அவர் வருத்தத்தோடு சொல்லலானார்:- "மகராஜ்! எங்களை ஒரு துரோகி மோசம் செய்துவிட்டான். நாங்கள் நம்பி மோசம் போனோம்."

இவ்வாறு ஆரம்பித்து, ஞானியின் கதையையும், கடைசியில் அவரைத் தாங்கள் கொன்று விட்டதையும் சாங்கோபாங்கமாகச் சொல்லி முடித்தார். கடைசியில், அந்த ஞானியின் எலும்புகளையும் கொண்டு வந்து வைத்து, "இந்தத் துரோகியின் எலும்புகளை வீர மன்னரான தாங்கள் தான் தங்கள் ஜயத்துக்கு அடையாளமாகக் கொண்டு போகவேண்டும்" என்று மலை ஜனங்கள் சொன்னார்கள்.

இதைக் கேட்ட ராஜா திடீரென்று ஒரு யோசனை செய்தான். தனது சிப்பாய்களையெல்லாம் கூப்பிட்டு, அந்த ஞானியின் எலும்புகளைக் காட்டினான். "இந்த மலையில் அகப்பட்ட பொக்கிஷம் இது. இங்கே திரண்டிருந்த ஞானத்தின் மிச்சம் இதுதான். இதைப் பத்திரமாய், மரியாதையாய் எடுத்துக்கொண்டு போவோம். இந்த மூட ஜனங்களிடம் இது இருப்பது தகாது" என்றான் ராஜா. அந்த எலும்புகளை எடுத்துக்கொண்டு, ராஜாவும் சேனையும் தங்கள் தேசத்துக்குப் பயணமாகி விட்டார்கள்.

ஞானியின் எலும்புகளைத் தன்னுடைய சொந்தத் தேசத்தில் புதைத்து வைத்து, அந்த ராஜா அதன் மேல் ஒரு கோபுரம் கட்டினான். மலைக்குப் பக்கத்திலிருந்து மற்ற ராஜாவோடு அவன் சமாதானம் செய்துகொண்டான். தனது வாழ்நாளின் பாக்கிக் காலத்தை ஈசுவரத் தியானத்திலும், சன்மார்க்கத்திலும் கழித்தான். "பல ராஜ்யங்களை வென்று சக்கிரவர்த்தியாக வாழ்வதைவிட, அந்த ஞானியைப்போல் வாழ்வதே மேல்" என்று அடிக்கடி அவன் சொல்லுவான்.

ஆனால், மலை ஜனங்களோ, பல மாதங்கள் கஷ்டப்பட்டு, கோட்டை கொத்தளங்களைப் புதிசாய்க் கட்டிக் கொண்டார்கள். பக்கத்து நாடுகளிலிருந்து சாராய வகைகளை வாங்கி நிறைத்துக் கொண்டார்கள். ஆயுதங்களும் சேகரித்தார்கள். "இந்தக் கஷ்டமெல்லாம் ஒரு பித்துக்குளியின் பேச்சைக் கேட்டதால்தான் விளைந்தது" என்றார் சிலர். "முன்னதாகவே இந்தத் துரோகி அந்த ராஜாவோடு ஏதோ உடன்படிக்கை செய்திருக்கிறான் போலிருக்கிறது. இல்லாவிட்டால், இவனுக்கு அவன் கோயில் கட்டுவானா?" என்றார் வேறு சிலர்.

என்றாலும், சில வருஷங்களில் மலைவாசிகளும் மிகுந்த படைப் பலம் உடையவரானார்கள். அப்பொழுது, அந்தப் பெரிய ராஜாவின் சந்ததியினர் ஆட்சி புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களோடு இவர்கள் யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள். எதற்காக? அந்த ஞானியின் கோயிலைக் கைவசப்படுத்திக் கொள்ளுவதற்காகத்தான். "அதை நாம் கைவசப்படுத்திக் கொள்ளாவிட்டால், நம் தேசத்துப் பெரிய மனிதரை நாம் மதிக்கவில்லை என்ற அபகீர்த்தி வந்துவிடும். நாம் என்ன மூடர் என்று பெயர் எடுக்கலாமா?" என்று காரணம் சொன்னார்கள்.

மேலும், மலைவாசிகள் வருஷா வருஷம் அந்த ஞானிக்காகப் பண்டிகையும் கொண்டாடினார்கள். எப்படிக் கொண்டாடுவார்கள் தெரியுமா? ராணுவ வீரர்களை அணிவகுத்து ஊர்வலம் வருவார்கள்; நிறைய நிறையச் சாராயம் குடிப்பார்கள். "இதென்ன பக்தி! ஞானி இப்படியா சொன்னார்?" என்று யாராவது சந்தேகமாய்க் கேட்டால், கேட்டவன் மண்டையை உடைத்து, தங்களுடைய பரம பக்தியை நிரூபணம் செய்துவிடுவார்கள்.

[ரெஜினால்டு எ. ரெய்னால்ஸ் என்பவர் சிக்காக்கோ "யூனிட்டி"ப் பத்திரிகையில் எழுதிய ஒரு கதையை அனுசரித்து, இது தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.]

—தி. ஜ. ரா.

ரஹீம் வாக்கு

1. நீசர்களோடு விரோதமும் வேண்டாம் ப்ரீதியும் வேண்டாம் நாய் நக்கினாலும் கெடுதல்தான்; கடித்தாலும் கெடுதல்தான்.

2. சிறியவன் பெரியவனானால் கர்வம் மிகுதியடைவான். சதுரங்கத்தில் காலாள் மந்திரியானால் கோணக் கோண ஓடுவானன்றோ?

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date stail and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters.
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

BOOKS OF THE HOUR

	Rs.	A.
By Mahatma Gandhi		
Satyagraha in South Africa ...	4	8
Young India—I (1919-22) ...	4	0
Young India—II (1924-26) ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8
By C. Rajagopalachar		
Chats Behind Bars ...	0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study ...	0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages ...	2	0
Gandhiji in Ceylon ...	1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran ...	2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi ...	3	8
By Richard B. Gregg		
Economics of Khaddar ...	1	0
Gandhiji's Satyagraha (2 Vols.)	2	8
Gandhism & Socialism ...	0	2

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

‘ஆண்பிள்ளைப் பாப்பாத்தி!’

(“இராஜாத்தி” எழுதியது.)

ஜனங்கள் தப்புத் தப்பாக அபிப்பிராயங்கள் சொல்லி விடுகிறார்கள். அது சரியல்ல, இது சரியல்ல என்று அவர்கள் பேசிவிடுகிறார்கள். ஆனால், நேரே போய்ப் பார்த்தால் எல்லாம் வேறே மாதிரியா யிருக்கிறது. ஒரே ஒரு கோடி காட்டி விட்டால், அதற்கு மேல் யூகம் செய்கிறோ மல்லவா? இந்த மாதிரிதான், அநேக வம்புகளும். கல் பனையாய் என்னென்னவோ சொல்லி விடுகிறார்கள். கோவிந்தன் ஒரு பொய் சொன்னான் என்றால் போதும். கோவிந்தன் பொய்யன், அவன் சொன்னதெல்லாம் பொய் என்ற சந்தேகம் ஜனிக்கிறது. அவன் நல்ல நல்ல காரியம் செய்தால்கூட, அதுக்கெல்லாம் கோரமான கால் தலை வைத்து, பிடிக்காமல் செய்துவிடுகிறார்கள். காமாட்சியைப் பற்றிய சமாசாரமும் இப்படிப்பட்டது தான்.

மாந் தோப்பிலுள்ள வாய்க்கால் கரையில் என் சிநேகிதையோடு சென்றபொழுது, பெண்கள் காமாட்சியைப்பற்றி ஏதோ பேசிக்கொண் டிருந்தார்கள். நான் அதற்குமுன் காமாட்சியைப் பார்த்ததில்லை. அவள் படத்தை மாத்திரம் பத்திரிகையில் கண்டதுண்டு. அவள் முனிசிப்பாலிட்டியில் ஒரு மெம்பர். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

முதன் முதலில் இவளைப்பற்றிச் சற்றுச் சவிஸ்தாரமாய்க் கேட்டது வாய்க்காங்கரைப் பேச்சுத்தான். அதை விஸ்தாரமாய் எழுத எனக்குப் பிடிக்கவே யில்லை. காமாட்சியைப் பற்றிப் பலபல அவதூறுகளைப் பெண்கள் சொன்னார்கள். “அவள் ஒரு ஆண்பிள்ளைப் பாப்பாத்தி” என்று சொன்னாள் ஒருத்தி. இன்னொருத்தி “அது தப்பு. அவளுக்கு வெட்கமே கிடையாது” என்று இன்னும் என்னவெல்லாமோ அடுக்கினாள். ஒரு பெண்ணாவது அவளைப்பற்றி நல்ல அபிப்பிராயம் சொல்ல வில்லை. இந்தப் பேச்சுக்கு நடுநடுவே ஒருத்திக் கொருத்தி கண் சிமிட்டிக்கொண்டு “கல கல” வென்று சிரித்தார்கள். பத்திரிகைகளில் வெளியிடக்கூடாத அநேகம் அநேகம் வம்புகளையெல்லாம் அளந்தார்கள். முன்னே நன்றா யிருந்தாளாம்; இப்போதுதான் காமாட்சி கெட்டுப்போய் விட்டாளாம்.

இவளைக் குறித்து ஏன் இவ்வளவு பழிகள் கிளம்பி யிருக்கின்றன? இந்தப் பெண்களுக்கெல்லாம் அவள்மீது என்ன குறை யிருக்கமுடியும்? துளிக்குறை காமாட்சி மேலே இல்லாமல் இத்தனை வம்புகள் பிறக்காது என்று எனக்குக்கூடத் தோன்றிற்று. இருந்தாலும் அவளை நேரே போய்ப் பேட்டி கண்டு விட்டுத்தான் வரவேண்டும் என்று தீர்மானம் செய்தேன்.

உருமத்தில் இரண்டரை மணியிருக்கும்போது, முனிசிபல் கவுன்சிலர் காமாட்சி வீட்டுக்கு என் சிநேகிதையோடு போனேன். காமாட்சி என்னைப்பற்றி விசாரித்தாள். நான் ஒரு பத்திரிகைக்காரி என்று தெரிந்ததும் சந்தோஷத்தோடு என்னிடம் பேசலானாள். அதற்குமுன், அங்கிருந்த ஒரு புருஷனிடம் கண்ணால் ஜாடை காட்டினாள். அவர் எழுந்து நகரப் போனார். நான் கூச்சப்படுவேன் என்ற எண்ணமோ என்னவோ என்று நினைத்தேன். “அவர்கள் யாரோ?” என்றேன். “அவர்களா?” என்று சிரித்த காமாட்சி, கன்னம் செவக்கத் தலையைச் சிறிது குனிந்துகொண்டு “இந்த வீட்டு எஜமான்” என்றாள். காமாட்சியின் புருஷன் என்று அறிந்து கொண்டேன். “அவர்களுக்கு நம்மால் இடைஞ்ச லில்லையானால், இங்கேயே இருக்கலாமே” என்றேன். புருஷனும் ஒரு பக்கமாய் அமர்ந்திருந்தார்.

காலையில் மாந் தோப்பில் வம்பு பேசிய ஒரு பெண்கூட இங்கே வந்து சேர்ந்தாள். எல்லாருமாகவே கலகலப்பாய்ப் பேசிக்கொண் டிருந்தோம். காமாட்சி, கொஞ்சங்கூட ‘ஆண்பிள்ளைப் பாப்பாத்தி’யாய் நடந்துகொள்ளவில்லை. கௌரவமான அநேக சமாசாரங்களைப் பற்றிப் பேசினாள். நல்ல புத்திசாலித்தனமான வார்த்தைகள் சொன்னாள். நகரத்திலுள்ள பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் என்னென்ன உதவி செய்யலாம் என்பதைப்பற்றி என்னைப் பல யோசனைகள் கேட்டாள். புருஷர்களுக்குத் தோன்றாத பல சிரமங்களை அவள் சொன்னாள். ஒரு முனிசிபல் மெம்பர் எத்தனைதான் செய்துவிட முடியும்? அவள் மிகுந்த உற்சாகமா யிருந்தாள். தனது முனிசிபல் பதவியைக் குறித்து அவளுக்கு ரொம்பச் சந்தோஷம் என்று காணப்பட்டது. ரொம்ப அபூர்வமாகக் கிடைக்கும் உரிமை யல்லவா இப்பேர்ப்பட்ட பதவி. இந்தத் தேர்தல் வெற்றிக்காக, தன் கணவன் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அடிக்கடி குறிப்பாய்ப் பிரஸ்தாபித்தாள். கணவனிடம் அவளுக்கு மிகுந்த அன்பு என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டேன். அவளைப்பற்றி மிக நல்ல அபிப்பிராயம் விழுந்தது.

பின்னால், வெளியே வந்த பிறகு, காமாட்சியைப் பற்றி யோசித்தேன். இவ்வளவு அன்பு, நயம், மரியாதை இவற்றோடு கூடிய ஒரு பெண்ணைப் பற்றிக் கிளம்பிய அவதூறுகளின் காரண மென்ன? ஒரு பெண் முனிசிபல் மெம்பராகலாமா, ஒரு பெண் வாத்தியாராகலாமா என்றெல்லாம் இன்னுங்கூட ஜனங்கள் எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். இவை வழக்கத்துக்கு விரோதமாம். ஆகையால், வழக்கத்துக்கு மாறாக அவள் என்ன வேண்டுமானாலும் செய்வாள் என்று ஒரு தப்பெண்ணம் ஜனங்களிடம் உண்டாகி விட்டது. ஆகையால், அவளைப்பற்றி என்ன வம்பு வந்தாலும், தானும் கொஞ்சம் மூக்கு, காது வைத்து ஒவ்வொருவரும் பழிகளைப் பரப்பிவிடுவதாய்த் தோன்றிற்று. அவள் முனிசிபல் மெம்பரானதுதான் இத்தனை அவதூறுகளுக்கும் காரணம் போலிருக்கின்றது. நான் ஒரு பத்திரிகைக் காரியாக எழுதி வருகிறேனே, என்னைப் பற்றிக்கூட என்னென்ன வம்பு ஊரெல்லாம் நடமாடித் திரிகின்றதோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது. அம்மா! என்ன ஜனங்கள், இந்த ஜனங்கள்!

கதரையே

அணியுங்கள்

பொது உடைமை வாழ்க்கை

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

பொது உடைமை ராஜ்யத்தை உடனே ஸ்தாபித்துவிட முடியாது; சிறுகச் சிறுகத்தான் ஸ்தாபிக்கவேண்டும். முதலில், சில தொழில்களைத் தனி மனிதர் சொந்தத்தில் செய்யும்படி விட்டு வைக்க வேண்டியதுதான்; மற்றவற்றைப் பொது நிர்வாகத்துக்கு மாற்றிவிட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக, ஒவ்வொரு தொழிலையும் பொதுவுக்கு மாற்றிவந்தால், கடைசியில் சகல தொழிலுமே பொது நிர்வாகத்தின்கீழ் வந்துவிடும். இப்படிச் செய்து வருகையில் என்ன ஆகுமென்று சொல்லுகிறேன். இப்பொழுது பணம் கொடுத்து வாங்கும் பல சாமான்களை அப்பொழுது ராஜாங்க உத்தியோகஸ்தர்களிடம் கேட்டு, நாம் வாங்கிக்கொள்ளலாம். பம்புக் குழாயில் தண்ணீர், சந்தைகளில் தாகத்துக்கு மோர் முதலியவை இப்போது கிடைக்கவில்லையா? இந்த மாதிரி அப்போது அநேக சாமான்கள், தேவைப்பட்டவர்களுக்குக் கிடைக்கும். கிராமத்தில் மயிர்வினைஞன் இலவசமாய் வேலை செய்து விடுகிறான். வண்ணான் அப்படியே துணி வெளுத்துத் தருகிறான். பொது உடைமை ராஜாங்கத்தில், இந்த மாதிரியே டாக்டர், தோட்டி, சமையற்காரன் ஆகிய எல்லாருமே இலவசமாய் உதவி செய்வார்கள். வேலை இருக்கிறவர்களெல்லாம் ரயில் வண்டியில் இனாமாய்ப் பிரயாணம் செய்யலாம். அதற்கு ஒன்றும் பணம் கொடுக்கவேண்டியதில்லை. ஒரு குடும்பத்தில் வண்டியிருந்தால், குடும்பத்தைச் சேர்ந்த யார் வேண்டுமானாலும் அந்த வண்டியைக் கட்டிச் செல்லவில்லையா? பொது உடைமை ராஜ்யத்திலும் இப்படித்தான். ரயில் வண்டி எல்லாருக்காகவுமே ஓடும். அப்படியிருக்க, எதற்காக எவரும் கூலி கொடுக்கவேண்டும்? இந்த மாதிரியே பொது உடைமை ராஜ்யத்தில் இன்னும் அநேக வசதிகள் இலவசமாய்க் கிடைக்கும்.

பொது உடைமை ராஜாங்கத்தின் முக்கிய வேலை, உணவுப் பண்டங்களை எல்லாருக்கும் ஒழுங்காகப் பங்கிட்டுக் கொடுப்பதுதான். ஆகையால், சாப்பாட்டுக்கு எவனும் பணம் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. சோம்பேறித்தனமாய்க் காலம் கழித்துக் கொண்டு, இந்தச் சௌகரியங்களையெல்லாம் நாம் அடையமுடியாது. பொது வாழ்வுக்கு, ஒவ்வொருவரும் தன் தன் கையால் இயன்ற வேலைகளைச் செய்தேயாகவேண்டும்.

ஒரு தேன் கூட்டை எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு ஈயும் வேண்டிய ஆகாரத்தை அருந்துகிறது. ஆனால், சம்பளம் ஒன்றும் கிடையாது. எல்லாம் உழைக்கின்றன; எல்லாவற்றுக்கும் சாப்பாடு கிடைக்கிறது. வேலையெல்லாம் பொது ஊழியமாயிருக்கும்; வேலை செய்வோர் யாவரும் கௌரவிக்கப்படுவர். இப்போது நாம் வேறு வேறு தொகைகளைச் சம்பளம் கொடுக்கிறோம். இதனால்தான் சில வேலைகள் கௌரவமாகவும் வேறு சில வேலைகள் அகௌரவமாகவும் இருக்கின்றன. பொது உடைமை ராஜ்யத்திலோ சகல வேலையும் கௌரவமாயிருக்கும்; சகல வேலையும் அவசரமும் அவசியமுமாயிருக்கும். ஆகையால் யார் யார் எந்தெந்த வேலைக்கு ஏற்றவரோ அது அதில் எல்லாரும் அமர்த்தப் படுவார்கள்.

மிக நன்றாக வைத்தியம் செய்பவனுக்கு அரசாங்கத்தார் இக்காலத்தில் ஒரு பட்டம் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு தோட்டி நன்றாக வேலை செய்தால் அதைப்பற்றிக் கவனிப்பதேயில்லை. பொது உடைமை ராஜ்யத்தில் பட்டங்களையும் விசேஷச் சலுகைகளையும், யாரார் தன்தன் வேலையை நன்றாய்ச் செய்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுப்பார்கள். ஒரு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு நல்ல தோட்டி விசேஷ லீவு எடுத்துக்கொள்ளலாம். இங்கிருந்து காசிக்குப் போய்வர இஷ்டமானால், ரயில் பிரயாணம் முதலிய வசதிகள் பெறுவதற்கு அவனுக்கு உரிமை இருக்கும். அவனுக்கு நல்ல உணவு கிடைக்கும்; நாடகங்கள் பார்க்க அனுமதி கிடைக்கும். ஒவ்வொரு இடத்திலும் உள்ள ஜனங்கள் அவனுக்கு உதவி செய்யுமாறு ராஜாங்கத்தின் கட்டளை பிறக்கும். ஆகையால், கௌரவ அகௌரவங்களைப்பற்றி இப்போது இருந்துவரும் பாகுபாடுகள் சாசுவதமானவை அல்ல; இதை நீங்கள் அறியவேண்டும். இவை என்னவோ தற்செயலாய் ஏற்பட்டுவிட்ட பிரிவினைகளே யாகும்.

ஒரு வீட்டில் தாயை எவ்வளவு கௌரவமாய் மதிக்கிறார்கள்! இப்படித் தாயைப்போல் தேசத்திலேயே தோட்டியை மதிக்கப்போகிற ஒரு காலம் வரப்போகிறது. கஷ்டங்கள், அசௌகரியங்கள் இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு செய்யவேண்டிய வேலைக்கும், மிகுந்த கவனத்தோடு செய்ய வேண்டிய வேலைக்கும் மிகுந்த கௌரவம் கொடுக்கப்படும். சில வேலைகள், இயற்கையிலேயே கஷ்டமாயும் மனசுக்குப் பிரியமில்லாமலும் இருக்கின்றன. தோட்டி வேலையும் இப்படிப்பட்ட ஒன்று. இந்த வேலைகளைச் செய்ய ஜனங்கள் முன்வராமலிருக்கலாம். குடும்பங்களில் கூடத்தான் மனசுக்குப் பிடிக்காத சில காரியங்கள் இருக்கின்றன. அவற்றை வீட்டிலேயே ரொம்பத் தன்னலத் தியாகம் செய்பவரும் மிகவும் கௌரவிக்கப் படுபவருமான பெரியவர்கள்தான் மேலே போட்டுக்கொண்டு செய்கிறார்கள். இப்பொழுதும்கூட, சில ஆசிரமங்களில், தன்னலத் தியாகிகளான மனிதர்கள்தான் இப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவர்கள் மிகவும் கௌரவிக்கவும் படுகிறார்கள். இவ்வாறே, பொது உடைமை ராஜ்யத்திலும் நோயாளிக்குப் பணிவிடை செய்யவும், அழுக்குத் துணிகளைச் சுத்தம் செய்யவும் தியாகிகள் முன் வருவார்கள். மற்றத் தொழில்களைச் செய்வோருக்குக் கிடைக்கும் கௌரவத்தைவிடப் பத்து மடங்கு கௌரவம் அவர்களிடமே செலுத்தப்படும்.

[இது 1930-ம் வருஷம் பல்லாரிச் சிறையில் இருந்த இராஜீயக் கைதிகளுக்கு தலைவர் ராஜகோபாலாச்சாரியார் செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதியாகும். "Chats Behind Bars" என்ற ஆங்கிலப் புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது.]

வேறு வேறு பெயர்கள்

("திலீபன்" எழுதியது)

"சொன்னால் விரோதமது, ஆனாலும் சொல்லுவன் கேண்மினோ" என்று ஆரம்பித்தார் ஒரு ஆழ்வார். அநேக விஷயங்கள் இப்படித்தான். கொஞ்சம் வெளிப்படையாகச் சொன்னால் விரோதம். வார்த்தையிலே நகாசு செய்தாலும், கருத்து ஒன்றாய்த்தானிருக்கும். பொம்மையைக் குதிரை என்றால், ஏறி உட்கார்ந்து சவாரி செய்துவிட முடியாது. ஆனால், நிஜக் குதிரை என்று குழந்தை நினைக்கும் பொழுது சந்தோஷமடைகிறது. வெறும் பொம்மைக்குரிய மரியாதைகளை நீங்கள் அதற்குச் செய்யப் போனால், குழந்தைக்குக் கோபம் வந்துவிடுகிறது. பொம்மைக் குதிரைக்கு ஒன்றும் ஹிம்சையில்லை; ஆனால், குழந்தையின் இனிய உணர்ச்சியை நீங்கள் சிதைத்து விடுகிறீர்கள். வேறு பெயர், வேறு பார்வையிலிருந்து உதிக்கும்; வேறு நடக்கையைத் தூண்டும்.

சிறையில் ஒருவன் மோருக்குக் கூக்குரல் போடுகிறான். அப்பொழுது மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள், தெரியுமா? பல பேர் பல தினுசாய்ப் பேசுகிறார்கள். "ரௌடி" என்று மரியாதையாக ஆங்கிலச் சொல்லைப் பிரயோகிக்கிறார் ஒருவர். "சாப்பாட்டு ராமன்" என்கிறார் இன்னொருவர். "அனுபவமில்லாத அசடன்" என்கிறார் மற்றொருவர். "பொறுப்பற்ற பித்தன்" என்று சொல்லுகிறவரும் உண்டு. கடைசியில் மோர் கிடைக்கிறது. ("இல்லை" என்று சிறையனுபவமுடைய நண்பர்கள் மறுக்கக்கூடும். எல்லாம் உத்தேசமான கற்பனைதான்; நடந்த விஷயமல்ல.) அன்று 'கலகம்' செய்தவனை எல்லாரும் மறந்துவிடுகிறார்கள். மோர் 'ஸப்ளை' வெகு ஒழுங்காக நடப்பதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை எல்லோருமாகவே பணிக்காய்ச் செய்து கொள்ளுகிறார்கள்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிராட்லா என்ற தீரன், ஒரு பிரமாணத்துக்காகப் போராடினான். காமன்ஸ் சபையில் இப்படித்தான் பிரமாணம் செய்யவேண்டுமென்று ஒரு வசனம் இருந்தது. தன் மனச்சாட்சிக்கு அந்த வசனம் ஒவ்வாது என்று பிராட்லா சொன்னான். அவனை வெளியே போகச் சொன்னார்கள். "மாட்டேன்" என்று மறுத்தான். சார்ஜெண்டைவிட்டுக் கல்தாக் கொடுத்துத் தள்ளச் சொன்னார்கள். பிராட்லா அவர்களைத் திமிரிக்கொண்டு உள்ளேயே நின்றான். குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கி வெளியே கொண்டு போனார்கள். இந்த மாதிரி இரண்டு மூன்று தடவை நடந்துவிட்டது. அப்பொழுது, ஏறக்குறைய இதைக் 'கலாட்டா' என்றுதான் 'கனவான்கள்' சொல்லியிருப்பார்கள். ஆனால், இப்போதோ எண்ணச் சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர்களில் ஒருவன் என்று பிராட்லாவை உலகம் ஏகோபித்துப் போற்றுகிறது. காரணம் என்ன? அவன் எந்த வசனத்துக்கு ஆட்சேபனை சொன்னானோ அது மாறுதலடைந்துவிட்டது. 'கலாட்டாவை வீரமாக்கியது வெற்றி என்று கூறலாமா?

இரண்டு தம்பிடிகளை வைத்துக்கொண்டு ஒருவன் தொழில் ஆரம்பிக்கிறான். ஒரு தம்பிடிக்கு நாலு தம்பிடி லாபம்; அதாவது நானூறு 'பெர்ஸெண்ட்'! அந்தக் காலத்தில் எல்லாரும் என்ன சொல்லுகிறார்கள்? "இது மோசடி," "இப்படியெல்லாம் சேர்த்தா அவன் தரித்திரம் விடியப் போகிறது!" "பேராசை, பெரு நஷ்டம்" என்றெல்லாம் என்னென்னவோ சொல்லுகிறார்கள். அந்தச் சிறிய பெட்டிக் கடைக்காரன் இன்று பெரிய முதலாளியாக விளங்குகிறான். முந்தி அவன் வியாபாரத்தை மோசடி என்று சொன்ன அதே வாய்கள், "வியாபாரத்தில் அவன் மகா நிபுணன்" என்கின்றன. "வியாபாரத்தில் லாபம் வைக்காது நடத்த முடியுமா? சின்ன வியாபாரத்தில் பெரிய லாபம்; பெரிய வியாபாரத்தில் சின்ன லாபம். அப்படி வைத்தால்தானே கட்டும்" என்று சமாதானம் வேறே. முன்னே "மோசடி"யாயிருந்தது இப்போது வியாபார நுட்பமாகி விட்டது. ஆனால், எத்தனையோ சிறு கடைக்காரர்கள் இன்னும் பெட்டிக் கடைதான் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏன் முதலாளிகள் ஆகவில்லை? இதற்குச் சரியான சமாதானம் கிடைக்காது; உலகத்தைச் சுற்றிய பதில்தான் கிடைக்கும். வெற்றியும் லாபமும் கிடைப்பதற்கு முன், வழிகளுக்கு ஒரு வகைப் பெயர்கள் இருக்கும். வெற்றியும் லாபமும், வழிகளுக்குப் புதிய நாமங்களைச் சூட்டிவிடுகின்றன.

தெருக்கோடியில் 'கலகம்' செய்யும் அதே மனோபாவமே, தேசம், மதம் முதலியவற்றிற்காக நடக்கும் கலகங்களுக்கும் அடிப்படையாக இருக்கிறது என்றால் சிலர் நம்ப மாட்டார்கள். ஒரே காரியத்துக்கு, ஒரே குணத்துக்கு, ஒரே வழிக்கு, வேறு வேறு நிலைமைகளில் வேறு வேறு பெயர்களும் தந்துவிடுகிறோம். மனித குலத்துக்கு எப்பொழுது பார்த்தாலும் லாப நஷ்டக் கணக்கிலேயே பிரியம் போலிருக்கிறது. ஒரு சம்பவத்தின் ஆரம்பத்தில் அதை இழிவுடன் நோக்குவது சர்வ சாதாரணமாயிருக்கிறது. அதிலே இலை தளிர்ப்பது போல் சில பலன்கள் வெடித்ததும் சற்று யோசனை செய்கிறார்கள். முடிவான வெற்றி அல்லது லாபம் ஏற்பட்டதும், அன்போடும் ஆதரவோடும் பார்க்கிறார்கள்; புதிய பட்டங்கள் தந்துவிடுகிறார்கள். இதனால்தான் ஒரே செயலுக்கு அல்லது குணத்துக்கு வெவ்வேறு பெயர்கள் மாறி மாறித் தோன்றுகின்றன. ஆனால், தன்னைப் போலவே, தர்ம தேவதையும் லாப நஷ்டக் கணக்குப் போடுவதாக, மனிதன் எண்ணுவது மாத்திரம் சரியல்ல வென்றே தோன்றுகிறது. எந்தச் சமயத்திலும், அன்பும், நல்லெண்ணமும், கனிந்த பார்வையும் வேண்டும். தர்மதேவதை இவற்றையே அங்கீகரிப்பாள். இதுதான் உண்மை.

Chats Behind Bars
BY
C. RAJAGOPALACHARI
Price As. 6 *Postage extra.*

இனி—

(சி. சுப்பிரமணிய பாரதி)

நடந்த தெல்லாம் போக, இனிமேல் நடக்கவேண்டிய காரியத்தை நாம் யோசனை செய்ய வேண்டும். கோயில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டுமானால், ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றாமல் விஷயத்தைச் சொல்ல வேண்டும். கடவுள் எங்கும் இருக்கிறாரே; எல்லாம் கடவுள்தானே. ஊருக்கு நடுவில் ஒரு கோவிலைக் கட்டி அதில் ஒரு கல்லையோ செம்பையோ நட்டு அங்கேதான் எல்லோரும் வந்து கும்பிடவேண்டும் என்ற நியமம் எதற்காக என்றால், ஜனங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுவதற்காக. கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறதென்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லையென்று நம்பலாமா?

கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே, நம்மைச் சூழவும் அநந்த கோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது. இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து. "தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன்" என்பது முன்னோர் கொள்கை. உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம். ஒன்று கூடிக் கடவுளை வணங்கப்போகுமிடத்து மனிதரின் மனங்கள் ஒருமைப் பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்து கொள்ள இடமுண்டாகுமென்று கருதி முன்னோர்கள் கோயில் வகுத்தார்கள். ஊரொற்றுமை கோயிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும் பொருட்டாக. கவனி.

நல்ல பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆணாகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வமெல்லாம் உனது தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களின் இடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தி மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய். அவளைப் போலவே நம்முடைய பெண்கள் மனைவி ஸகோதரி மாதா முதலியோர் ஒளி வீச நாம் பார்க்கவேண்டும் என்பது குறிப்பு. ஆண் தெய்வமெல்லாம், நீ, உன் பிதா, உன் ஸகோதரர், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள் அடையவேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன. சிவன் நீ, சக்தி உன் மனைவி, விஷ்ணு நீ, லக்ஷ்மி உன் மனைவி; பிரம்மா நீ, ஸரஸ்வதி உன் மனைவி. இதைக் காட்டி மிருக நிலையிலிருந்த மனிதரைத் தேவ நிலையில் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில்களாம். இதைப் பூசாரிகள் மறைக்கிறார்கள். கும்பிடுவோர் நித்ய அடிமைகளாகவும் தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லதென்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது. அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பது போல நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்குகிறார்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள். எத்தனை நாள் ஒரு மோசக்கார மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வம் காட்டமுடியும். ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப்போகிறது. ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்திப் பழைய மாமூலை உத்தேசித்துக் கல்லை மாத்திரம் கும்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட கல் வரம் கொடுக்கவே கொடுக்காது. எப்படிச் சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதுக்கள் பக்தியுடன் மந்திரம் ஜெபித்து, கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே வந்து நிர்த்தனம் பண்ணுவாரோ, அதுபோல் யோக்கியதை இல்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில் பகவான் அந்தக் கல்லை விட்டுப் போய்விடுவார். அது மறுபடி ஸாதாரண ரஸ்தா உருளை ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்துவிடும். கோயிலுக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் செய்யும். துளிக்கூட ஒரு அணுக்கூட, மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் பரிபூர்ண சித்தி யடைவானாகில் அவனே ஈசுவரன். குருவி, காக்கை, புழு, எறும்பு ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடாது. வஞ்சனை யில்லாமல் 'ஏதோ பிறந்தோம், தெய்வம் உலகத்தில் விட்டதே வழி' என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டைபோல், உலக வெள்ளத்தில் செல்ல வேண்டும்.

பலஹீன ஜந்துக்களுக்கு மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானோ, அதுவரை கலியுகம் இருக்கும். அநியாயம் நீங்கினால் கலி இல்லை. உலக முழுதும் அநியாயத்தை விட்டுச் சமீப காலத்தில் நீங்குமென்று நினைக்க ஹேதுவில்லை யாதலால் கிருதயுகம் வரப்போவதில்லை. நாம் மாத்திரம் ஏன் நியாயம் செய்ய வேண்டுமென்று விபரீதமாக யோசித்து, எவனும் தான் நடக்கும் அநியாய வழியில் தொடர்ந்து செல்லக்கூடாது. எவன் அநியாயத்தை விடுகிறானோ அவனுக்குக் கிருக யுகம் அந்தக்ஷணமே கை மேலே கிடைக்கும். இதில் சந்தேக மில்லை. ஒருவன் கலியை உடைத்து நொறுக்கினால், அவனைப் பார்த்துப் பத்துப் பேர் உடனே நொறுக்கி விடுவார்கள். இங்ஙனம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடியாக மனித ஜாதியில் ஸத்ய யுகம் பரவுதலடையும் காலம் ஏற்கனவே ஆரம்பமாய் விட்டது; இதில் சந்தேகமில்லை.



முடிகொண்டான் வெங்கிடராமய்யர்

(ஈ. கிருஷ்ணய்யர் எழுதியது)

ஸங்கீதத்தில் பிராபல்யமடைந்திருப்போர் யாவரும் தகுந்த யோக்யதையுடையவர்களா, யோக்யதையுடையவர்களெல்லாம் போதுமான பிராபல்யமடைந் திருக்கின்றார்களா என்ற கேள்வி மிகவும் ருசிகரமானது. கவனிக்கும்படியான நல்ல அம்சங்கள் ஏதுமில்லாது எவருக்கும் நீடித்த பிரக்யாதி வந்துவிடுமென்று நம்பவேண்டாம். ஆனல் உயரிய அம்சங்களைக் கொண்டவர்களெல்லாம் தகுந்தபடி பிரகாசிக்கின்றனர் என்பதற் கில்லை. இன்னும் ஸங்கீத வித்வான்களின் வாழ்நாட்களில் மங்காத பெயருடன் நெடுநாள் தொழில் செய்பவர் சிலரே. பல காரணங்களால் வித்வான்களின் கலை அழகு குறைவது ஒரு பக்கம்; பொது ஜனங்களின் ருசி மாறி அதற்கேற்பப் புதிது புதிதாய் வரும் வழிகளின்மீதும், பாடகர்களிடமும் அவ்வப்போது கொள்ளும் மோஹம் இன்னெரு பக்கம். ஸங்கீதக் கலை வளர்ச்சியிலும், வித்வான்களின் தொகையிலும் தஞ்சாவூர் ஜில்லா முதன்மையாயும் சென்னை இரண்டாவதாயும் இருந்த காலம் போக, தற்காலம் சென்னையே முதன்மை ஸ்தானம் வஹிப்பதுபோல் காண்கிறது. எனவே வித்வான்கள் பெயர் பெறுவதும் இவ்விடத்துப் பொது ஜனங்களின் ருசியைச் சற்றுப் பொறுத்திருக்கிறது. பொதுவாக, சென்னை ஸங்கீத ரஸிகர்களின் ருசி 10 வருஷத்துக்கு முன்னிருந்ததுபோல் இப்போதில்லை. அவ்வப்போது அதிக மாறுபாடுகள் காணப்படுகின்றன. கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் ஸங்கீதமே பெரிதாகக் கருதப்பட்டு அதில் மோஹம் கொண்டிருந்த நாளுண்டு. இப்போது அவருடைய வழிகள் காணப்படுவதாக அநேகர் அவரவருக்கு அபிமானமுள்ள வித்வான்களைப் பற்றிச் சொல்லிக் கொள்கின்றனர். சிலரிடம் கொஞ்சம் கொஞ்சம் ஆங்காங்கே அவரது வழிகள்போல் தோற்ற மிருக்கலாம். ஸங்கீத ருசியில் அப் பெரியாருடைய வழிகளையே அதிகம் பின்பற்றும் பாடகர்கள் இரண்டொருவ ரிருந்தும் அவர்களின் ஸங்கீதத்துக்குச் சென்னையில் அதிகம் பிரியமுண்டா என்பது கேள்வி?

இவ்வித யோஜனைகளுடன் ஒரு ரஸிகன் நமது தமிழ் நாட்டிலுள்ள வித்வான்களைப் பற்றி நினைக்குங்கால், பல பெயர்களில் முடிகொண்டான் வெங்கிடராமய்யரின் ஞாபகம் அவசியம் வந்தே தீரும். அவர் சென்னையில் முன்னே பிராபல்ய மடைந்திருந்த காலமுமுண்டு. இப்போது அவ்வளவு அதிகம் இவ்விடம் வெளியில் காணப்படாவிடினும் அவர் கலையின் அழகுக்கு மாத்திரம் குறைவில்லை. ஸங்கீத ரஸிகர்கள் சில வித்வான்களையே திரும்பத் திரும்பக் கேட்பதில் திருப்தியடைந்து விடுகிறார்கள். நல்ல யோக்யதையுடைய இதர வித்வான்களுமிருக்கிறார்கள் என்ற யோஜனை அதிகம் வருவதில்லை.

ஸ்ரீமான் வெங்கிடராமய்யருக்கு வயது சுமார் 37 ஆகிறது. குட்டை ஆகிருதி; மெலிந்த தேகக்கட்டு; சிறிய முகம்; சாதாரணத் தென்னாட்டுக் குடுமி; மாநிறம்; சிறந்த குணம்; தன்னடக்கம் அதிகமாகக் கொண்டவர். அதுவே இந்நாளில் ஓர் குறையாயிருக்கலாம். அவர்மேல் பற்றுடன் அவர் புகழையே பாடும் இக்காலத்துக்கு வேண்டிய ஸ்நேகித கோஷ்டி குறைவு. முடிகொண்டான் சக்ரபாணி அய்யரின் புதல்வர். தாய்வழிப் பாட்டனார் ஸ்ரீவாஞ்சியம் 'தளுக்கு' ஸ்வாமிநாதய்யர் அக்காலத்துப் பொம்மலாட்டத்தில் 'தளுக்காய்'ப் பாடும் பெயர் பெற்றவர். தாய் தந்தை யிருவரும் லக்ஷிய ஞானம் படைத்திருந்தவர்கள். குழந்தைப் பருவ முதலே பாடும் சக்தி வாய்ந்த வெங்கிடராமய்யர் முடிகொண்டான், சீர்காழி முதலிய இடங்களில் வாசித்து, பிறகு சென்னை தியலாஜிகல் ஹைஸ்கூலிலும் ஐந்தாம் பாரம்வரை கல்வி கற்றார். இதற்குள் தமது ஸங்கீத லக்ஷிய ஞானத்தையும் நன்கு விருத்தி செய்து கொண்டு விட்டார். தமது 15-வது வயதில், திருவாரூருக்கு வந்து எட்டிலூர் ஸ்வாமிநாதய்யரிடம் சுமார் ஒரு வருஷம் சாஸ்திர முறைப்படி ஸங்கீதம் பயின்றார். சீக்கிரம் ஸ்வர ஞானம் பெற்றார். பிறகு கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யரிடம் சில மாதங்கள் பழகி வந்தார். அன்னார் அச்சிறுவனுக்குப் பிரயாசைப்பட்டுக் கற்றுக் கொடுக்கும் ஸந்தர்ப்பங்கள் அதிகமில்லாவிடினும், அவர் ஸங்கீதத்திலேயே மிகுந்த பிரியமாதலால் அவர் வழிகளையே ஏகலைவனைப்போல் கவனித்துப் பின்பற்றிப் பழக்கிவந்தார். பிறகு நாதஸ்வரம் திருமருகல் நடேசனுக்குத் தவில் வாசித்து வந்தவரும்,

மிருதங்கத்தில் கைதேர்ந்தவருமான அம்மா சத்திரம் கண்ணுஸ்வாமி பிள்ளை அவர்களிடம் கொஞ்ச காலம் சிட்டிை யிருந்து 'லய' விஷயங்களில் நல்ல பிடிப்பும் தேர்ச்சியும் பெற்றதோடு 'வியவகார' மர்மங்களையும் அறிந்தார். சில அழகிய தில்லானுக்களும் 'எந்து தாகினாடோ' முதலிய கீர்த்தனங்களும், விசேஷ ஸ்வர ப்ரஸ்தாரங்களும் கற்றுக் கொண்டார். இதற்குள் கச்சேரி செய்யும் திறமையும் வந்து, திருப்பாப் புலியூர் ஸபையில் முதல் கச்சேரியும் செய்து வெளிவந்தார். கச்சேரிக்கு ஆரம்பித்த போதிலும் ஞானத்தை விருத்தி செய்யும் ஆர்வம் குறையாது திருவாலூரில் சிமிழி சுந்தரமய்யரிடம் அன்னர் இறுதி காலம்வரை விடாது பழகிப் பல விஷயங்களை அறிந்து கொண்டார். விதரணையாகவும் அழுத்தமாகவும், ராகம், ஸ்வரம் முதலியவை பாடுவதற்கான தேர்ச்சியும், தீக்ஷதர் கீர்த்தனைகளில் நல்ல பரிசயமும், லக்ஷண ஞானமும், பொதுவாய் உபயோகமான ஸங்கீதத்துக்கான அறிவை அவரிடமே பெற்றார். அவரே வெங்கிடராமய்யருக்கு முக்கிய குரு எனலாம். ஸங்கீத சாஸ்திர சம்பந்தமான நூல்களும் சில வாசித்திருப்பதாகத் தெரிகிறது.

சுமார் 19 வயது முதல் ஆரம்பித்து 18 வருஷங்களாகக் கச்சேரிகள் செய்து வருகிறார். சாரீரம் நடுத்தரமானது. கேட்டவுடன் மனதைக் கவரக்கூடிய இனிப்பும் கனிப்பும் அதிகமில்லாதிருந்தும் அரிய ஸாதகத்தினல் நல்ல உதவுபடியுள்ளது. 'ரவை' வகையைச் சேர்ந்த தில்லை. ஆங்காங்கே காணப்படும் 'பிர்க்கா' ஸாதகத்தினலாயது. பாடகருக்கு வேண்டியவாறு அடங்கி உபயோகப் படக் கூடியது. உருப்படிகள் அதிகம் பாடமுண்டு. கரஹரப்பிரியாவில் தானே ஒரு வர்ணம் செய்து பாடுகிறார். ராகமோ, ஸ்வரமோ நெரவலோ, உருப்படிகளோ எதிலும் அவசரமில்லாது, தன்னிச்சயம் கொண்டும், அழுத்தத்துடனும், நிதானமாயும் பாடுகிறார். அவர் பாடும் ராகங்கள் அநேகமாய் எல்லாம் விஸ்தாரமாயும், ஒழுங்காயு மிருக்கின்றன. 'தோடி,' 'பைரவி,' 'ஷண்முகப்ரியா,' 'கௌளீபந்து' இவை அவரிடம் விசேஷமென்பார்கள். 'த்விஜாவந்தி,' 'கௌரிமனோஹரி,' 'ஹம்ஸாநாதம்' முதலிய அபூர்வ ராகங்களையும் சுலபமாய்க் கையாளுகின்றார். முக்கியமாய் அவர் ராகம் பாடும்போது, 'பிர்க்கா'விலேயே அதிகமோஹம்கொண்ட இப்போதைய அவசர ஸங்கீதத்தின் கதம்பமாயில்லாது, 'விளம்ப', 'மத்யம' கால ஸஞ்சாரங்களை விவரமாகக் கவனித்தும், இடம் இடமாக நன்கு வகுத்தும், ஒவ்வொரு கட்டங்களிலும் போதுமான கல்பனையுடன் அலைக்குப் பின் அலை வருவதுபோல், கார்வைகளும் குழைவுகளும், கமகங்களும் பக்குவமாய்ப் பொருந்தி அமைந்த ஸங்கதிகளைப் படிப்படியாகச் சிறியதிலிருந்து பெரியதுவரை விவரித்துக் கொண்டும், ஒழுங்காய் ஆலாபனை செய்வது நன்கு கவனிக்கத் தக்கது; போற்றத் தக்கது. இதைப் 'பிளான் போட்டு'ப் பாடுவது என்று சிலர் கூறுவார்கள். இந்த ஸந்தர்ப்பங்களில்தான், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் நினைவு வர வேண்டும். ராகபாணியில் இப்பெரியார் மிகச் சிறந்தவர். ஒவ்வொரு முக்கிய கட்டங்களிலும் நின்று நிலைத்து, ஆங்காங்கு பொருத்தமான ஸஞ்சாரங்களை அபரிமிதமாய்க் காட்டுவதிலும், சில தடவை இரண்டொரு ஸ்வர ஸ்தானங்களிலேயே இருந்து கார்வைகள், குழைவுகள், அநுஸ்வரங்கள் இவைகளைப் பலவகையாகப் பிடித்துக் காட்டியும் ரஸிகர் மனதைப் பிரமிக்கச் செய்யும் திறமைவாய்ந்தவர் என்பது நாடறிந்த விஷயம். ஸ்ரீமான் வெங்கிடராமய்யர் பாட்டிலும், அப்பெரியாரின் நுட்பமான பிடிகள் நிறைந்திரா விடினும், இடம் இடமாக விவரமாய் ஸஞ்சாரங்கள் செய்வதும், அவ்வவ்விடங்களில் கூடியவரை எவ்வளவு விந்யாஸங்கள் காட்ட முடியுமோ அவ்வளவும் நல்ல கல்பனையுடன் ஒழுங்காக வெளிக் காட்டுவதும் விசேஷமாகத் தென்படும்.

கீர்த்தனை முதலிய உருப்படிகளையும் தெளிவான ஸாஹித்திய உச்சரிப்புடன் அழுத்தமாகவே பாடுகின்றார். காலப்பிரமாணம் போற்றத்தக்கது. சிறிது பெரிது இரண்டு வகைகளையும் சுலபமாய்க் கையாளுவதா யிருந்தும் இவர் போன்றவர்களிடம் பெரிய உருப்படிகளே நன்கு சோபிக்கின்றன. ஸங்கதிகளை அனுவசியமாய்க் குறைப்பதில்லை. தானும் அனுபவித்து, கேட்போரும் அநுபவிக்கும்படியாக நிலைத்து நிற்கும் 'பாவ'த்துடனேயே பாடுகிறார். தற்காலம் கச்சேரிகளில் பாடும் உருப்படிகளில் ஏற்கனவே அமைந்த ஸங்கதிகளைக்கூட நழுவவிட்டு, ஒட்ட ஒட்டமாக மணிக்கு 15 உருப்படிகள் பாடுவது அல்லது அவைகள் ஒவ்வொன்றுக்கும் பின் நீண்ட ஸ்வர ப்ரஸ்தாரம் செய்வதுமாக, கீர்த்தனைகளை விதரணையாய்ப் பாடுவது அரிதாய்விட்டது. நாட்டியத்தில்கூட 3 நிமிஷ கிராமபோன் பிளேட் மாதிரி மணிக்கு 15க்கு மேலான பதங்களைப் பாடி அபிநயம் பிடித்து முடிப்பதுதான் உயர்ந்ததாகி விட்டதென்றால், சென்னையில் ஸங்கீத ருசியின் சக்கரம் சுழலும் வேகத்தை என்னென்று சொல்வது?

வெங்கிடராமய்யரின் நெரவலிலும், விளம்ப, மத்யமகால வகைகள் அழகு பொருந்தி யிருக்கின்றன. 'குருலேக இடுவண்டி' என்ற கீர்த்தனைக்குப் பின் ஸ்வரம் பாடும் போதும், 'மாருபல்க குன்ன' கீர்த்தனையில் 'தூரபாரமந்து' என்ற இடத்திலிருந்தும், 'கத்தன வாரிகி'யில் 'நித்தூர நிராகரிஞ்சி' என்ற இடத்திலிருந்தும் நெரவல், ஸ்வரப்ரஸ்தாரம் இவை செய்யும்போதும் இவரைப் பாராட்டா திருக்க முடியாது. இவைகள் தவிர, பல்லவியிலும், ராக பாவம் குறையாது, சிறந்த மனோதர்மம், காலப்ரமாணம் இவைகளோடு, 'வியவகாரங்கள்' அறிந்தும் பாடுகிறார்.

இவரிடம் சிற்சில சமயங்களில், ஸங்கதிகளில் 'தேசல்' என்று ஸாதாரணமாய் வழங்கும் தோஷம் காணப்படுவதாகச் சொல்வதுண்டு. சிறிதிலிருந்து பெரிய ஸஞ்சாரங்களுக்கு வருகையில் சில தடவை ஒரே மூச்சில் நீண்ட ஸஞ்சாரங்களை அடுக்கடுக்காகக் கையாளும்போது இது ஒரு மாதிரி தென்படலாம். ஆனால் சமீபத்தில் கேட்ட கச்சேரிகளில் இக்குறை அதிகம் தென்படவில்லை. சிறந்த சாரீரம் படைத்தும், இந்தத் தோஷத்துடன் பாடும் பிரபல வித்வான்கள் சிலரைக் கவனிக்கும்போது இவரது குறை மிகச் சிறிதே. தன்னிச்சயத்துடனும், அழுத்தத்துடனும் பாடுபவ ராகையால் சிற்சில வேளைகளில்வரும் இக்குறையை அவர் எளிதில் நீக்கிக் கொள்ளக்கூடும். எந்த ஸந்தர்ப்பத்திலும் ஹார்மோனியத்தைத் தொடுவதில்லை என்ற பிரதிக்ஞை செய்து கொண்டால், இதற்கு இடமே இருக்காது. இவ்வளவெல்லாம் விபரமறிந்த இவர் கொஞ்சம் கச்சேரி பாணியைக் கவனித்தால் நல்லது. ஒவ்வொரு கீர்த்தனைக்குப் பின்னும் ஸ்வரம் பாடுவதை விட்டுவிடவேண்டும். மொத்

தத்தில் முடிகொண்டான் வெங்கிடராமய்யரின் சங்கீதத்தினழகு ஞான பலத்தினலும், விதரணையறிந்த நல்ல ஸாதகத்தினலும் ஆகிதேயல்லாது கேவலம் சாரீரப் பெருமையால் மாத்திரமல்லவென்பது வெளிப்படையாகத் தெரியும். கேட்டவுடன் ஆரவாரிக்கச் செய்யும் ஸங்கீத மில்லாவிடினும், கவனித்துக் கேட்கும் ரஸிகருக்கு நல்ல சாப்பாடு போன்ற திருப்தி தரக் கூடியது; அவசியம் கேட்டு ஆதரிக்க வேண்டிய உயரிய லக்ஷணங்கள் பொருந்தியது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மொழிபெயர்ப்பல்ல !

நண்பர் கிருஷ்ணய்யர் வித்வான்களைப் பற்றி நமது பத்திரிகையில் எழுதிவரும் விமர்சனங்கள் தமிழிலேயே அவரால் எழுதப் பட்டவை. அவை அவர் எழுதியுள்ள ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புகளா வென்று சில நிரூப நேயர்கள் கேட்கிறார்கள். ஆங்கில நூலில் எழுதப்படாத வித்வான்களைப் பற்றியே கிருஷ்ணய்யர் பெரும்பாலும் சங்கில் எழுதி வருகிறார். தமிழிலும் இத்தகைய விமர்சனங்களைத் தம்மால் எழுத முடியுமென்பதை கிருஷ்ணய்யர் காட்டிக்கொண்டு விட்டார்.

கையில் காசிருந்தால்

"அடடா! என் கையில் நிறையப் பணமில்லையே யென்று எண்ண வேண்டியிருக்கிறது. இந்தக் கதர்த் துணிகள் இவ்வளவு அழகாயிருக்கின்றனவே! எத்தனை வர்ணம்! என்ன பசுமை! எவ்வளவு அழகான தினிஸுகள். இந்தக் கதர் தினிஸுகள் அத்தனையையும் வாங்கிக்கொண்டு சீமைக்குப் போகவேண்டு மென்பது எனது ஆசை!" என்று மிஸ் மியூரியல் லிஸ்டர்—அவள்தான் மகாத்மாவை லண்டனில் உபசரித்த 'சபரி'—திருவல்லிக்கேணி காதி பந்தருக்கு விஜயஞ்செய்த போது கூறினாள். ஆனல் நம் நாட்டில் பிறந்த சிலருடைய கண்களுக்கு மட்டும் கதர் பிடிக்க வில்லையே. இவர்களுக்குக் கண்ணில் கோளாறு என்றுதான் சொல்லவேண்டும். வேறென்ன சொல்வது?

அயோக்கிய ஆசிரியன்

பேனவைச் சாக்கடையில் தோய்த்து எழுதுவதையே தொழிலாகக்கொண்டு அலைகின்ற வெள்ளைக்காரர் பலருண்டு. அநாதையாய்க் கிடக்கும் இந்திய மக்களைத் தூற்றி மனதுக்குத் தோன்றியவாறு புத்தகம் எழுதிக் காசாக்குவது அவர்கள் தந்திரம். கேட்பாரில்லை என்ற திமிர்தான் இதற்குக் காரணமல்லவா? ஒரு காலத்தில் கன்னி மேயோ இந்தியாவைத் தூற்றி ஓர் புத்தகம் எழுதினளே அந்தக் குப்பையைவிட அதிக நாற்றமுடைய இன்னொரு குப்பையை விக்டர் டேன் என்ற புதிய ஆசிரியன் தூக்கிக்கொண்டு திரிகின்றன். அவன் எழுதியுள்ள நிர்வாணப் பரதேசி (Naked Ascetic) என்ற குப்பை நூலை அச்சடித்து விற்பதற்கு லண்டன் ரைடர் அண்டு கம்பெனியும் உதவி செய்கிறது. துரியோதனனுக்கேற்ற துச்சாசனன் என்றுதான் இந்த சேர்க்கையைச் சொல்லவேண்டும்.

அந்தப் புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் புரட்டிப் படித்தாலும் இந்திய மனதுக்கு ஆத்திரமேற்படும் என்பதில் சந்தேகமில்லை.

"உலகத்திலேயே மிக்க சாமர்த்திய சாலிகளான புளுகர்கள் இந்தியர்கள்தான்."

"கேவல சுபாவத்தின் சிகாமணிகள் இந்தியர்கள். அதில் முதல் பாக்கு வாங்குபவர்கள் வங்காளிகள்."

"சூர்யன் பிரகாசிக்கும் பிரதேசங்களெல்லாவற்றிலும் கடைந்தெடுத்த போக்கிரிகள் என்று மார்வாடிகளைச் சொல்ல வேண்டும். விபசாரத்தனம் ஊறியுள்ள ஜாதி அதுதான்."

"துருக்கன்தான் மகா மட்டமான மனிதன். கிழக்கு நாடுகளின் துராசையும், மேற்கு நாடுகளின் கெட்ட நடவடிக்கைகளையும் ஒருமிக்கக் குத்தகை வாங்கிக்கொண்டது அந்த ஜாதி."

"இந்தியாவில் மிக்க சகஜமான குற்றம்—குழந்தைகளைப் புணர்தல்."

"தன்னலமில்லாது வாழும் வாழ்க்கையை இந்தியர் அறியவே அறியார்."

"தனியாய் ஒருவன் அகப்பட்டுக் கொண்டால் தாங்கள் 50 பேரிருந்தால் அப்போதுதான் தாக்கும் புத்தி இந்தியர்களுக்கு ஏற்படும்."

"இந்தியரிடமுள்ள ஆத்ம சக்தியைவிட அநேக பங்கு ஆத்ம சக்தி நமது பிரிட்டிஷ் மாலுமி ஒருவனின் விரலிலிருக்கின்றது.

"உலகத்தில் எந்த மனிதனிடமும் நம்பிக்கை கொள்வது தப்பு. அதுவும் ஒரு இந்தியனென்றல் அவனை நம்புவதைப் போன்ற ஆபத்து வேறில்லை."

"இந்திய ஸ்திரீகள் தங்களை சன்யாசிக்கு ஸமர்ப்பித்துக்கொள்ளும் காட்சிகளை இந்தியாவில் அடிக்கடி காணலாம்."

"இந்தியர்கள் சிறு வயதிலேயே கெட்ட பழக்கம் உடையவர்கள். ஆகவே அவர்களின் இருபதாவது வயதிலேயே அநேகர் நபும்ஸகர்களாக இருக்கிறார்கள்.

"பெண்களுக்குப் பர்த்தாவென்றும், ஸ்திரீகளின் கற்பென்றும் பேசுவதெல்லாம் சுத்த ஹம்பக். நல்ல பேரம் வந்தால் கொஞ்சம்கூடத் தயக்கமின்றி மனைவிகளையும் பெற்றெடுத்த குழந்தைகளையும் இந்தியர் விற்றுவிடுவார்கள். கிழக்குத் தேசமே ஒரு வேடிக்கையான நாடக மேடை. மேலேயுள்ள மினுமினுக்குப் பூச்சை நீக்கிவிட்டால் உள்ளே ஓட்டைப் பித்தளை தென்படும். மனைவிமார்களை இரவல் தருவது இந்தியாவில் சர்வ சகஜம்."

விக்டர்டேன் எழுதியுள்ள இந்த அசங்கிய சித்திரத்தின் பகுதிகளை எடுத்துக்காட்டி ஸர்வண்ட் ஆப் இந்தியா பத்திரிகையில் ஒருவர் கண்டித்திருக்கிறார். இத்தகைய அயோக்கிய நூல்களைக் கண்டிப்பது மட்டும் போதாது. இந்த ஆசிரியர்களை மன்னிக்க இடமேயில்லை. இவர்களுக்கு என்ன தண்டனை தரலாமென்று நாம் பேசித்தான் என்ன பிரயோசனம்? ஒரு புராதனமான தேசத்தையும், அதன் குடிகளையும் பற்றிக் காலித்தனமாக, அயோக்கியத்தனமாக, அசங்கியமாக ஒரு பயல் எழுதுவது, அதை இந்த 'மகத்தான' பிரிட்டிஷ் அரசாங்கம் பார்த்துக்கொண் டிருப்பதா? இந்த மாதிரி இன்னும் சில நூல்கள் இங்கிலாந்தில் பிரசுரமாகுமாகில் இத்தகைய அயோக்கியப் பிரசாரத்தை அநுமதித்துக்கொண்டிருப்பதால் அதற்கு இந்த பிரிட்டிஷ் சர்க்காரும் உடந்தையாய்த் தானிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டி யிருக்கும். உடனே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அந்த ரைடர் கம்பெனிக்குப் போய் அத்தனை புத்தகங்களையும் கிழித்து இங்கிலீஷ் சானலில் போடப்போகிறதா இல்லையா என்பது தான் கேள்வி! பிரிட்டிஷ் ஜாதியைப் பற்றி இழிவாக நாளைக்கு ஜப்பானிலோ ருஷியாவிலோ இத்தகைய ஆபாச விவரண நூல் ஒன்று தோன்றுமாயின், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு சும்மா யிருந்து விடுமோ?

காந்திஜி தமாஷ் !

சண்டை போடும் விதம்

மேரி பீடர்ஸன் என்ற ஐரோப்பியப் பெண்மணி, பறங்கிப்பேட்டைக் கிருஸ்தவப் பெண் கலாசாலைத் தலைமை வாத்தியார். அவள் தனது பள்ளிக் கூடச் சிறுமிகளை அழைத்துக் கொண்டு, காந்திஜீயைப் பார்ப்பதற்காகச் சீர்காழிக்கு வந்தாள். சின்னச் சின்னக் குழந்தைகள். அவற்றில் இரண்டை இரு கைகளாலும் வாரி எடுத்துக்கொண்ட காந்திஜீ, இரண்டு குழந்தைகளின் தலையையும் ஒன்றோடொன்று முட்டி, "இது என்ன தெரியுமா? இதுதான் சண்டை போடும் விதம்" என்று சொல்லி, 'கலீர்' என்று நகைத்தார். பிறகு இரு குழந்தைகளையும் அன்போடு மார்புறத் தழுவிக்கொண்டார்.

"என் கிட்ட இல்லை"

இதுவும் அப்பொழுது நடந்த சங்கதிதான். காந்திஜீ நூல் நூற்பதை ஒரு குழந்தை கூர்மையாகக் கவனித்துக் கொண்டு நின்றது. பக்கத்திலிருந்த ஒரு ஐரோப்பியக் குழந்தை, காந்திஜீயிடம் இந்தியக் குழந்தையைக் காட்டி, "அவள் கிட்ட ஏராளமாய் நகை இருக்கிறது!" என்று சொல்லியது.

"ஆமாம். அதை அவள் கொடுத்து விடுவாள்" என்று பதில் சொன்னார் காந்திஜீ.

உடனே ஐரோப்பியக் குழந்தை "ஆனால், என் கிட்ட ஒன்றும் கிடையாது" என்று சொல்லி, தலையையும் கையையும் பலமாய் ஆட்டிற்று.

தட்டு யாருடையது ?

சீர்காழி முனிசிபல் சபைச் சேர்மன் ஒரு வெள்ளித் தட்டு நிறைய ரூபாயை வைத்துக் காந்திஜீயிடம் கொடுத்தார்.

"தட்டு உங்களைச் சேர்ந்ததா, ஹரிஜனங்களைச் சேர்ந்ததா?" என்றார் மகாத்மாஜீ.

"உங்களைச் சேர்ந்தது" என்றார் சேர்மன்.

"பேஷ்! தட்டு என்ன பணம் தருகிறது என்று பார்க்கலாம்" என்று சொல்லி, அங்கேயே ஏலங் கூற ஆரம்பித்துவிட்டார் காந்திஜீ. தட்டு 50 ரூபாய்க்கு ஏலம் போயிற்று.

யாத்ரா மார்க்கம்

விடைபெற்ற காட்சி

அன்றிரவு அரக்கோணத்தில் விடைபெற்ற காட்சி உருக்கமானதாயிருந்தது. நான்கு வாரங்கள் நெருங்கிப் பழகிய நண்பர்களைப் பிரிந்தபோது காந்திஜீயின் கோஷ்டியாருக்கு மிகுந்த கஷ்டமாகத்தா னிருந்தது. தமிழ் நாட்டில் சேவை புரியும் நண்பர்கள் இரவும் பகலும் உழைத்து இந்தச் சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாய்ச் செய்தது, காந்திஜீயின் ஹ்ருதயத்திற்குக் களிப்பூட்டியது. விடை பெற்றுப் புறப்படும் சமயத்தில் ஒரு பத்திரிகை நிருபர் காந்திஜீயை ஒரு கேள்வி கேட்டார். காந்திஜீ சொன்ன பதிலாவது:—"இரண்டு பலன்கள் மிக முக்கியமானவை. இந்தச் சிரமமான காலத்திலும் ஜனங்கள் தாராளமாய்ப் பண உதவி செய்தார்கள். கூட்டங்களுக்கு ஜனங்கள் வரமாட்டார்களோ என்று தோன்றியதற்குப் பதிலாக, நன்றாகக் கூட்டத்தின் நோக்கத்தை யறிந்திருந்தும், பதினாயிரக் கணக்கான ஜனங்கள் வந்து விட்டார்கள்; இதில் பெண்கள் தொகை ஏராளமாகும். இவைதான் அந்தப் பலன்கள்."

ஹ்ருதய சௌந்தர்யம்

குடகு நாட்டில் காந்திஜீ விஜயம் செய்த முதல் இடம் கைகேரி என்ற ஊராகும். அது இயற்கைக் காட்சி வாய்ந்திருந்தது. அடுத்த இடம் குடிக்கேரி என்பதாகும். இங்கு காந்திஜீ சொன்னதாவது.—"குடகு நாட்டில் இந்தச் சுந்தரமான இடத்திற்கு நான் வர இயலும்படி ஆண்டவன் அனுக்கிரகம் செய்ததற்கு, நான் பெருங் களிப்படைகிறேன். நான் இங்கே வந்த நிமிஷம் முதல் இவ்விடத்தின் இயற்கைவனப்பைப் பருகி மகிழ்ந்து வருகிறேன். இந்த இயற்கைக் காட்சியைப் போலவே உங்கள் ஹ்ருதயங்களும் சௌந்தர்யமாயிருக்குமென்று நான் நம்புகிறேன். என்றாலும், உங்கள் ஹ்ருதய சௌந்தர்யத்தைப் பற்றி, ஒரு சந்தேகம் மாத்திரம் இன்னும் என் உள்ளத்தில் குந்தியிருக்கிறது, சமவெளிப் பிரதேசங்களில் உள்ள விஷம்போன்ற தீண்டாமைக் கொடுமை இங்கே இல்லை. என்றாலும், அதில் ஒரு அம்சம் இன்னும் உங்களிடையில் இருந்து வருகிறது. ஆலயங்களை இன்னும் நீங்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வில்லை. ஒரு தகப்பன் தனது சில குழந்தைகளைக் கூப்பிட்டு, 'உங்களுக்கு உணவு, உடை, வீடெல்லாம் தருகிறேன்; என் ஹ்ருதயத்தில் மாத்திரம் இடந்தரமாட்டேன்' என்று சொன்னால் எப்படி யிருக்கும்? அப்படித்தான் இருக்கிறது இதுவும். ஹரிஜனங்களை ஆலயங்களுக்குள் விடாதவரையில், உங்கள் ஹ்ருதயங்கள் சௌந்தர்யமானவை என்று நான் சொல்லமுடியாது. இயற்கை போதிக்கும் பாடத்தைக் கற்று, உங்கள் ஹ்ருதயத்திலுள்ள களங்கத்தைப் போக்கிச் சுத்தம் செய்து கொள்ளுங்கள்."

"மரியாதை தெரியவில்லையே"

திருச்சிராப்பள்ளியில் காந்திஜீ ரயில் வண்டியில் ஏறியபோது ஒருவர் வந்து, "டாக்டரின் பிள்ளை தங்களுக்கு விடைகொடுக்க விரும்புகிறான்" என்றார்.

"பணங் கொடுக்காமலா விடை கொடுப்பது! பையனுக்கு மரியாதை தெரியவில்லையே" என்று நகைத்தார் காந்திஜீ.

டயரை ஒட்டை போட

இது காந்திஜீ செய்த தமாஷல்ல. ஆனாலும், இங்கே குறிப்பிடக்கூடிய ஒன்றுதான். நாகனேரிக்குச் சமீபத்தில் ஒரு கிராமத்தில் அநேகம் ஜனங்கள் வழியில் காந்திஜீயைத் தரிசிப்பதற்காக, நின்று கொண்டிருந்தார்கள். காந்திஜீயின் கார் முன்னடிப் போனது தெரியாமல், 'வரப்போகிறது; வரப்போகிறது' என்று ஒரு வாலிபன் காத்துக் கொண்டிருந்தான். அவனிடம் "காந்திஜீயின் கார் முந்தியே போய்விட்டது" என்று ஒருவர் சொன்னார்.

உடனே வாலிபன் சொன்னதாவது:—"என்ன! முந்தியே போய் விட்டதா? தெரிந்திருந்தால் அதன் டயரில் என் கத்தியால் ஒரு ஒட்டை போட்டிருப்பேனே. அப்போது அவரை நன்றாய்த் தரிசித்திருக்கலாமே."

கதரையே
அணியுங்கள்

கடைசி நகரில்

(மகாத்மாஜீயின் பிரசங்கம்)

[தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் கடைசி நகரமாகிய அரக்கோணத்தில் மகாத்மா காந்தி செய்த பிரசங்கத்தின் சுருக்கம் கீழே தரப்பட்டிருக்கிறது.]

போலீஸாருக்கு வந்தனம்

"சமீபத்தில் தமிழ் மாகாணத்தை விட்டுப் புறப்படப் போகிறேன். ஆகையால், போலீஸ் ரயில்வே அதிகாரிகளுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாகாணத்தின் எல்லா விடங்களிலும் எனக்கு அவர்கள் உதவி செய்தார்கள். போலீசார் தாங்கள் ஜனங்களின் ஊழியர்தான் என்பதை உணர்ந்து நடந்துகொண்டது எனக்குப் பெரிய சந்தோஷம் தருகிறது. உலகத்திலுள்ள அநேக தேசத்துப் போலீஸ்காரரிடம் நான் பழகியிருக்கிறேன். ஆனால், லண்டன் போலீஸ்காரரை நினைக்கும் பொழுதுதான் மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. அந்த ஞாபகம் எனக்கு இப்போது வருகிறதென்றால், இந்த மாகாணப் போலீஸ்காரர் நடந்து கொண்ட விதத்தை நான் எவ்வளவு மதிக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

தொண்டர்கள் உதவி

"தொண்டர்களைப் பற்றி நான் சொல்லாமல் விட முடியாது. தென்னிந்தியாவில் எங்கும் அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்தார்கள். தொண்டரில் அநேகருக்கு நல்ல பயிற்சி கிடையாது; சிலர் கொஞ்சம் படபடப்பாகவும் இருந்தார்கள். என்றாலும், என் சுற்றுப்பிரயாணம் வெற்றிகரமாக முடிவதற்கு அவர்கள் அத்தியாவசியமாயிருந்தார்கள். இதை நான் சொல்லாவிட்டால், நன்றி மறந்தவனாவேன்.

சகாக்களுக்கு வேண்டுகோள்

"மாகாணம் முழுவதும் ஒரு மகத்தான விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் எனது சகாக்கள் இந்த விழிப்பை, பரிபூரணமாய்ப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வார்களென்றே நான் நம்புகிறேன். உடனே அவர்கள் வேலையில் இறங்க



வேண்டும். இல்லாவிட்டால், இந்த விழிப்பினால் உண்டாயிருக்கும் உற்சாகம் சிதைந்து வியர்த்தமாய்ப் போய் விடும். ஆகையால், கோபுர உச்சியிலிருந்துகொண்டு தூரத்தில் நிகழும் சம்பவங்களைக் கவனிப்போது போல, தங்களையும் பொது ஜனங்களின் காரியங்களையும் அவர்கள் கவனித்து வருவார்களாக.

இலட்சியத்தை நினைவுகூர்க

"தீண்டாமை விலக்கால் நாம் அடைய எண்ணியிருக்கும் உன்னதமான இலட்சியத்தையும் நினைவுகூருங்கள். சர்வஜன சகோதரத்துவமே அந்த இலட்சியம். இதை மறக்காமல் நினைவில் வைத்துக் கொண்டிருப்பதால் தான், 'ஹரிஜன இயக்கம் ஆத்மார்த்தமான, சமய சம்பந்தமான இயக்கம்' என்று நான் சொல்லுகிறேன். இந்தத் தீண்டாமை யென்ற சாபத்தை ஒழிக்காவிட்டால், ஹிந்து மதம் மாயும்; ஹிந்துக்கள் நாசமாவர். இதில் சந்தேகமேயில்லை. நமது லட்சியத்தின் சித்திரத்தை ஒருவாறு கோடி காண்பித்தேன். இதை நீங்கள் பூரணமாய்ப் பூர்த்தி செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடனேயே, இன்று உங்களிடம் விடைபெறுகிறேன். நமது ஹிருதயந்தான் மாறவேண்டும்; மாறினால், நமது காரியம் எளிதாகிவிடும். உங்கள் ஹிருதயத்தில் மாறுதல் ஏற்படுவதற்கு, ஆண்டவன் உங்களுக்கு உதவி புரிவாராக!

உலகத்துக்கே நன்மை

'தீண்டாமை பாவமல்ல, சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட ஓர் தர்மமும் ஆகும்' என்று இன்னும் நம்பிக்கை கொண்டிருக்கும் ஜனங்கள் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு எனது சொந்த அனுபவத்தைத்தான் பதிலாய்ச் சொல்ல முடியும். சென்ற ஐம்பது வருஷங்களாக நான் ஒரே விதமாய் வாழ்க்கை நடத்தி வருகிறேன். ஒரு சாமான்ய மனிதனுக்கு, அதிலும் என்னைப் போல் வேலை நிறைந்த ஒரு மனிதனுக்கு எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சாஸ்திர பரிசீலனையும் செய்திருக்கிறேன். தீண்டாமையில் நம்பிக்கையுடைய சாஸ்திர பண்டிதர்களுடன் விவாதங்களும் செய்திருக்கிறேன். இத்தனைக்கும் பிறகு, ஹிந்து சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு எவ்விதமான ஆதாரமும் கிடையாதென்ற நிச்சயமான முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். தீண்டாமை ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் விரோதமான பாவமாகும். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக அதனை நாம் விட்டுத் தொலைக்கிறோமோ அத்தனைக் கத்தனை நமக்கு நல்லது; முழு உலகத்துக்குமே நன்மையாகும்."

எலி வேட்டைக்கு 14 ஆயிரம்!

நாகபுரியில் எலி வேட்டையில் சர்க்கார் முனைந்துள்ள வீரத்தைப்பற்றி, சில வேடிக்கையான புள்ளி விவரங்கள் கிடைத்துள. ஜன சங்கியையில் எவ்வளவு மனிதர்களிருக்கின்றனரோ அவ்வளவு எலிகளைப் பிரதி வருடமும் கொல்வதென்று திட்டம் போட்டிருக்கின்றார்களாம். ஒரு எலியைக் கொல்வதற்கு நகரத்தில் சராசரிச் செலவு இரண்டணா வீதம் ஆகின்றதாம். 1931-ம் வருஷத்தில் மட்டும் லட்சத்துப் பதினேழாயிரம் எலிகள் மர்த்தனம் செய்யப்பட்டன. 13,800 ரூபா மொத்தச் செலவாயிற்று. ஆனால் பக்கத்திலுள்ள ஸிவில் ஸ்டேஷனில் 400 ரூபாயில் 49 ஆயிரம் எலி கொல்லப்பட்ட சிக்கனம் பாராட்டப்பட்டதாம்.

செத்த எலிகளைக் கணக்கெடுப்பதற்கும், கூலி கொடுப்பதற்கும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் மேயோ ஆஸ்பத்திரியில் நியமிக்கப்பட்டிருப்பதும் ருசிகரமான விஷயம். ஆண்டவா! எத்தனை விதமான உத்தியோகங்கள் உலகில் தோன்றுகின்றன, அப்பா!

எல்லா ஆறுகளும் வாய்க்கால்களும் பள்ளத்தில் இருப்பதுமில்லை.

—ஞாயிறு பத்திரிகை.

ஆகாயத்தில் தண்டவாளத்தில் ஓடுகின்ற வாய்க்கால்களும் உண்டுபோலும்!

*　*　*

மூலாம் பூசுதல் தங்கமல்ல; அது மேல்பட்டு

—வாரப்பத்திரிகை.

பகட்டு என்பது பட்டு ஆகிவிட்டது போலும்! "எழுத்துக் கோப்பவர் ஆசிரியரல்ல; அவர் கம்பாஸிட்டர்"

*　*　*

ஆவல் மிகுந்த நண்பர் திருவையாறும்...........

—கதைப்பரிசு விளம்பரம்.

சென்னைக்கு விஜயம் செய்யப் போகிறாரா என்ன?

*　*　*

கதை...........ஆபீசுக்கு வரும்படியாகச் செய்யவேண்டும்.

—அதே விளம்பரம்.

கதைகள் வந்தால் வரும்படி தான். பரிசு தந்த பின்னர் செலவுதான்.

*　*　*

வீட்டிலே தினம் ஒரு சாவானல் சாவும் கல்யாணந்தான்.

—ஓர் கட்டுரை.

தினம் ஒரு கல்யாணமானல் கல்யாணமும்—?

*　*　*

என்ன இனிமை! ஈராறு காதிலே, பாடினல் இன்று முழுதும் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

—சங்கீதக் குறிப்பு.

பேறு காதிலே பாடலாமா? ஈராறு காதுடைய ஆட்களைத் தேடி அவரிடமே அந்தப் பாடகர் பாடட்டும்!

*　*　*

உடம்பிலுள்ள சக்தியைக் காப்பாற்றிக் கொள்ளலாம். உங்களுக்குப் புதிய உயிரைக் கொடுத்து...........

—மருந்து விளம்பரம்.

பழைய உயிர் எங்கே போகும்?

"இனி உங்கள் அழகிய குழந்தையின் சுளித்த முகத்தைக் காணவேண்டாம்...........எண்ணெய் கொடுங்கள்"

—விளம்பரம்.

எண்ணெய் கொடுத்த பின்பு முகாலோபனமாவது உண்டோ இல்லையோ?

*　*　*

உங்கள் சாமர்த்தியத்தை இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பார்க்க வேண்டும். எங்கே ஒரு கை பாருங்கள்!

—விளம்பரம்.

வலது கையையா? இடது கையையா?

*　*　*

ஆனந்த பிரசவங்கள்

—ஓர் விளம்பரம்.

இது ஓர் புதுப் பத்திரிகையின் பெயரா? இல்லை, இல்லை. மருந்து விளம்பரமென்று பின்னர்த் தெரிந்தது.

*　*　*

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்
[illegible]

—ஓர் சமயப் பத்திரிகை.

தலைகீழ் தர்பாராக இருக்கிறதென்று சொல்கிறார்களாக்கும்.

ரயில் மோட்டார் போட்டி



டெல்லி சட்டசபையில் ரயில்வே நிர்வாகத்தைப்பற்றிப் பேச்சு வந்தபோது ரஸ்தாக்களில் ஓடும் மோட்டார் வண்டிகள், ரயில்வே வருமானத்தைத் தாக்கி விட்டதாக ரயில்வே நிர்வாகப் பேரதிகாரி பேசினர். மோட்டாரைத் தலையோங்க விடாது செய்து விட்டால் பெட்ரோல் வியாபாரிகள் கூக்குரலிடுவார்களே, அதற்கு இந்திய அரசாங்கம் என்ன செய்யும்?

—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.
இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of 2¼" × 9"

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1	8	0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

Rambles in Vedanta

BY

B. R. RAJAM AIYAR

THE variety of the *pabulum* presented in this volume will be found pleasant and delicious both by the young and the advanced. While every morsel it contains is nutritious and easy of assimilation, not a few delicacies will be discovered which are exquisitely spiced and flavoured with stories and illustrations from the Puranas. The aim which runs through all—from the short fancy of Suka's advent to the long life-tale of Vasudeva—is the realisation of the Self, the knowledge of the Atman the elaboration and impression of the sublime truth taught by all religions, by the Vedas and the Puranas by the hoary sages of antiquity, by the Lord Sri Krishna, and reiterated by the Lord Jesus Christ in those hallowed words which will live for ever —"What shall it profit a man, if he shall gain the whole world and lose his own soul?"

Rs. 5

Swathantra Sangu Book Depot

Triplicane :: Madras.